www.facebook.com / newsplustamil www.newsplus.lk twitter.com/newsplus.lk

# NEWS PLUS

உன்னதமான பயணத்தின் அடையாளம்

14 AUGUST 2022 - SUNDAY | Pages - 11 | E Paper - # 002 / Y 01 / 2022

Web: WWW.NEWSPLUS.LK E-mail: editor@newsplus.lk

Cake Talk
Bakery & Confectionery
Telecom Juntion, kattankudy - 01.
Tel : 065 2248 444
55, Old Road, kattankudy - 03.
Tel : 065 2248 044
Hotline : 077 601 55 84

## ரஞ்சனுக்கு விரைவில் விடுதலை!



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க சிறையில் இருந்து விரைவில் விதலையாகவுள்ளார். இதற்கு

02 »»»



## புலம்பெயர் அமைப்புக்களின் தடையை நீக்கியது அரசு

### ஜனாதிபதி ரணில் அதிரடி!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கை அரசு, சில புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் சிலர் மீதான தடையை அதிரடியாக நீக்கியுள்ளது.

அதற்கமைய உலகத் தமிழர் பேரவை மற்றும் அதன் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் மீதான தடையை இலங்கை அரசு நீக்கியுள்ளது.

பிரிட்டன் தமிழர் பேரவை, கனடா தமிழ்க் காங்கிரஸ் ஆகிய அமைப்புக்கள் மீதான தடையையும் இலங்கை அரசு நீக்கியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இந்தத் தடை நீக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## ஐ.நா மனித உரிமையில் இலங்கைக்கு நெருக்குதல்?

இவ்வாண்டு செப்டம்பர் மாதம் 12ஆம் திகதி ஜெனிவாவில் நடைபெறுகின்ற மனித உரிமை ஆணைக்குழுவின் இலங்கை நெருக்குதல்களை எதிர்நோக்கலாம் என மனித உரிமை ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

வழமையான பிரச்சினைகளுக்கு மேலாக ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம்பதவியேற்ற

02 »»»

## We Want Election

## புது வழியில் போராட்டம்

அடுத்த மாதம் ஆரம்பம். உடனடியாக பொதுத் தேர்தலொன்றினை நடாத்துமாறி கோரி எமக்கு தேர்தல் வேண்டுமென்ற தொனிப்போருளில் புது வடிவிலான போராட்டமொன்றினை ஆரம்பிப்பதற்கு ஜே.வி பி தீர்மானித்துள்ளது. செப்டம்பர் மாதம் முதல் இப்போராட்டத்தினை ஆரம்பித்து அதன் பின் நாடு முழுவதும் இப் போராட்டத்தினை விஸ்தரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் விடுதலை முன்னணி முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

## நளீமியாவின் தலைமைக்கு அகார் முஹம்மத் நியமனம்



எம்.எஸ்.எம்.ஸாகிர்

ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் முதல்வராக (சுநஉவழச) உஸ்தாத் ஏ.சீ. அகார் முஹம்மத் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக்

03 »»»

## புலம்பெயர் அமைப்புக்களின் உதவி பெறவே தடை நீக்கம்

### பிரதமர் தினேஷ் விளக்கம்



"புலம்பெயர் தமிழர்களையும் அவர்களது அமைப்புக்களையும் தடைப்பட்டியலில் வைத்துக்கொண்டு, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அவர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியாது. எனவே, அவர்களின் உதவிகளைப் பெற்றுக்

02 »»»

## தமிழ் முற்போக்கு கூட்டணி அரசில் இணைய முடிவு

சர்வக்கட்சி அரசாங்கத்தில் இணைவதற்கு தமிழ் முற்போக்குக் கூட்டணி தீர்மானித்துள்ளதாக அறிய முடிகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைக்கப்படவுள்ள சர்வக்கட்சி அரசாங்கத்தில்

02 »»»

## கட்டுப்பாடுகளுடனேயே சீனக் கப்பலுக்கு அனுமதி

### இந்திய உறவில் விரிசல் இல்லை என்கின்றார் இலங்கைப் பிரதமர்

"சீனக்கப்பல் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்குள் பிரவேசிப்பதால் இலங்கை - இந்திய உறவில் விரிசல் ஏற்படும் என்று வெளியாகும் செய்திகளை அடியோடு மறுக்கின்றோம்."

- இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பு

02 »»»

## சீனக் கப்பல் வருகையால் உங்களுக்கு அச்சுறுத்தலா?

### இந்தியாவிடம் கோரிக்கைவிடுத்த வெளிவிவகார அமைச்சு

சர்ச்சைக்குரிய யுவான் வான் - 5 சீனக் கப்பலுக்கு இலங்கைகுள் பிரவேசிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கமசிங்க அனுமதி வழங்கியுள்ளார்.

இந்தநேரம், இக்கப்பலால் இந்தியாவுக்கு ஏற்படும் அச்சுறுத்தல் பற்றி எழுத்து மூலம் தெரிவிக்குமாறு

02 »»»

## சீனக் கப்பல் வருகை தரமுன் இலங்கைக்கு இந்திய உளவு விமானம்



யுவான் வாங் - 5 என்ற கண்காணிப்புக் கப்பல் 16 ஆம் திகதி அம்பாந்தோட்டை

02 »»»

## சிறுபான்மை தலைமைகள் மீது பழி சுமத்தும் ஹாபிஸ் நஸீர்




தேர்தலுக்காக அவசரப்படும் அல்லது தேர்தலை நடாத்துமாறு கோரும் சிறுபான்மை தலைமைகள், தமிழ்பேசும் மக்களுக்காகவே அறிமுகமான

மாகாணசபை தேர்தல்களை பிற்போடுவதற்கு 2017 செப்டம்பரில் வழிவகுத்த பாவத்தையும் சுமக்க வேண்டுமென சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட்

02 »»»

## புதிய மாற்றங்களுடன் தேசிய அடையாள அட்டை



ரிஹ்மி ஹக்கீம்

தற்போதைய தேசிய அடையாள அட்டையானது பல புதிய மாற்றங்களுடன் அறிமுகம் செய்யப்படவுள்ளதாக ஆட்பதிவு திணைக்களம்

02 »»»

## பரபரப்பை ஏற்படுத்தியுள்ள ரட்டா வங்கி பண வைப்பு

### சட்ட நடவடிக்கைக்கும் ஏற்பாடு

செயற்பாட்டாளரும் கோட்டா கோ ஹோம் நடவடிக்கையாளருமான ரட்டா என்பவருடைய வங்கிக் கணக்கில் வைப்பு செய்யப்பட்டுள்ள 50 லட்சம் ரூபா பணம் தொடர்பாக பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கோட்டா கோ ஹோம் முன்னணி செயற்பாட்டாளரான ரட்டாவின் சம்பத் வங்கி கணக்குக்கு இடம் தெரியாத நபர்

02 »»»

## கொழும்பு துறைமுகத்தில் பாக். போர்க் கப்பல்




பாகிஸ்தான் கடற்படைக் கப்பலான (பி. என்.எஸ்) தைமூர் இன்று (ஆகஸ்ட் 12) காலை முறைப்படி இலங்கையின் கொழும்பு

02 »»»

## கண் பார்வை இழந்த சல்மான் ருஸ்தி

### நரம்புத் தொகுதியும் பாதிப்பு பேசவும் முடியாத நிலைமை

அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் கத்திக்குத்துக்கு இலக்கான பிரபல எழுத்தாளர் சல்மான் ருஷ்தி கண் பார்வையை இழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத் தாக்குதலின் போது ருஷ்தியின் கையின் நரம்புத் தொகுதிக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதோடு, கத்திக்குத்து காரணமாக

02 »»»

Collaborate with...
SIYANE NEWS
www.siyanenews.com | facebook.com/Siyanemediacircle | twitter.com/SivaneNews | Sivane Media Circle
SIYANE MEDIA CIRCLE (PVT) LTD No. 41, Kahatowita, Veyangoda.
SIYANE Media Circle
SIYANE MEDIA CIRCLE
KAHATOWITA
GA 00213489
மாற்றத்தை நோக்கிய பயணம்

## கட்டுப்பாடுகளுடனேயே...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

"இந்தக் கப்பலின் வருகை தொடர்பில் எழுந்த சர்ச்சையான கருத்துக்களையடுத்து இலங்கை அரசு இது தொடர்பில் தீவிரமாக ஆராய்ந்தது. கப்பல் வருகைக்குச் சில கட்டுப்பாடுகளையும் விதித்தது. அதற்கு இணங்கியே குறித்த கப்பல் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு வருகின்றது.

எமக்கு இந்தியாவும் சீனாவும் முக்கியமான நாடுகள். எந்த நாடுகளையும் நாம் பகைக்க முடியாது. இரு நாடுகளும் இலங்கைக்கு உதவிகளை வழங்குகின்றன. எனவே, இரு நாடுகளையும் நாம் அரவணைத்துக்கொண்டே பயணிக்க வேண்டும்" - என்றார்.

## சிறுபாண்மை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அவர் விடுத்துள்ள அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தேர்தலை நடாத்தி என்ன பலன். பொருளாதார வியூகங்களும்,திட்டங்களுமே இன்று தேவைப்படுகிறது.சொந்த உழைப்பில் நாட்டை முன்னேற்றும் பொருளாதார செயற்பாடுகளே இன்று அவசியப்படுகிறது.

இதற்காகவே சகலரது ஒத்துழைப்பையும் ஜனாதிபதி கோருகிறார்.அவசரமாக தேர்தலுக்கு செல்ல வேண்டுமென்பது, மக்கள் ஐந்து வருடங்களுக்கு வழங்கிய ஆணையை குழப்பும் செயலாகவே இருக்கிறது. இவ்வாறு தேர்தலைக் கோரும் இதே,சிறுபான்மை தலைமைகள்தான் 2017 இல்,மாகாண சபைகளை நடாத்தாமல் காலங்களை இழுத்தடித்தன.

சிறுபான்மைச் சமூகங்களுக்கு என,விஷேடமாக வழங்கப்பட்ட அரசியல் அந்தஸ்துத்தான் மாகாண சபைமுறைகள். இதைக்கூட நடாத்த முடியாதளவுக்கு இதில் மாற்றங்கள் செய்வதற்கு உடன்பட்டவர்கள்தான் இவர்கள்.எல்லை நிர்ணய அறிக்கையில் இன்னும் இழுபறி நிலவுமளவுக்கே, இவர்கள் இந்தச்சட்டத்தில் திருத்தங்களை செய்துள்ளனர்.இவ்வாறு செய்தவர்கள் இன்று தேர்தலுக்கு அவசரப்படுவதேன்?? இவ்வாறு அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

## புதிய...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக்க தெரிவிக்கையில்,

"நாட்டில் தற்போது தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்காக பொதுவான தரவுகள் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. பயோமெட்ரிக் தரவுகளை இனிமேல் அடையாள அட்டைகளில் சேர்க்கப்பட வேண்டும். அதற்கமைய, பயோமெட்ரிக் தரவுகளை இணைத்து டிஜிட்டல் அடையாள அட்டை கட்டமைப்பை தயாரிக்கும் வேலைத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது" என்றார்.

"அத்துடன், உதாரணமாக நமது கைரேகைகள், இரத்தம் தொடர்பான விபரங்கள், கண் தரவுகள் ஆகியவற்றையே பயோமெட்ரிக் தரவு என்கிறோம்.

எதிர்காலத்தில், இந்த பயோமெட்ரிக் தரவை சேர்த்து தேசிய அடையாள அட்டையை வழங்கத் தொடங்குவோம். தற்போது, இது இந்திய உதவியின் கீழ் உள்ளது, இப்போது அனைத்து விடயங்களும் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய நாங்கள் அனைவரும் மீள் பதிவு செய்துக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது" என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழ் முற்போக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இணைந்துக்கொள்ளுமாறு தமிழ்முற்போக்குக் கூட்டணிக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுத்திருந்த நிலையில் கடந்த 11ஆம் திகதி ஜனாதிபதியை கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன் பின்னர் த.மு.கூ ஒன்றுக்கூடியுள்ளதுடன், சர்வக்கட்சி அரசாங்கத்தில் இணைவதற்கும் தீர்மானித்துள்ளது. சர்வக்கட்சி அரசாங்கத்தில் த.மு.கூட்டணிக்கு இரண்டு அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்கான இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளதாகவும் திகாம்பரம் மற்றும் இராதாக்கிருஸ்ணன் ஆகியோரை அமைச்சர்கள் நியமிக்க கூட்டணியின் உறுப்பினர்கள் இணக்கம் கண்டுள்ளதாக அறிய முடிகிறது.

## சீனக் கப்பல் வருகையால்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை வெளிவிவகார அமைச்சு இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது. ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்திலே இதற்கு ஜனாதிபதி அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

எதிர்வரும் 16ஆம் திகதி இக்கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு பிரவேசிக்கவுள்ளது. அம்பாந்தோட்டை துறைமுகம் சீனர்களின் கட்டுப்பாட்டில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

துறைமுகத்தை வந்தடைந்தது.

வருகைத் தந்த கப்பலை இலங்கை கடற்படையினர் கடற்படை மரபுகளுக்கு அமைவாக வரவேற்றனர்.

134 மீ. நீளம் கொண்ட இந்த கப்பலுக்கு கேப்டன் எம். யாசிர் தாஹிர் தலைமை தாங்குகிறார், மேலும் கப்பலின் துணையாக 169 பேர் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில், தைமூர் கப்பல் கட்டளை அதிகாரி இன்று மேற்கு கடற்படை கட்டளை தலைமையகத்தில் மேற்கு கடற்படை தளபதியை சந்திக்க உள்ளார்.

மேலும், இந்த கப்பல் ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரை இலங்கையில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, அத்தோடு இரு கடற்படைகளுக்கு இடையில் ஒத்துழைப்பையும் நல்லுறவையும் மேம்படுத்துவதற்காக இலங்கை கடற்படை ஏற்பாடு செய்யும் பல நிகழ்ச்சிகளில் கப்பலின் பணியாளர்கள் பங்கேற்பார்கள்.

அதேநேரம், இந்தக் கப்பல் ஆகஸ்ட் 15 ஆம் திகதி புறப்படும்போது மேற்கு கடல் பகுதியில் இலங்கை கடற்படையுடன் கடற்படை பயிற்சியை நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், பாகிஸ்தான் கடற்படையின் ஒரே மாதிரியான போர்க்கப்பலான பி.என்.எஸ் துக்ரில் , 2021 டிசம்பர் 13 அன்று உத்தியோகபூர்வ விஜயமாக இலங்கையை வந்தடைந்தது மற்றும் டிசம்பர் 16 அன்று மேற்கு கடற்கரையில் ஞடுஞே சிந்துரலாவுடன் ஒரு வெற்றிகரமான கடற்படை பயிற்சியை நடத்தியது.

பிராந்திய கடற்படைகளுடனான இந்த வகையான கடற்படை பயிற்சிகள் ஒவ்வொரு பங்காளிக்கும் எதிர்காலத்தில் பொதுவான கடல்சார் சவால்களை மேம்படுத்தும் ஒத்துழைப்பின் மூலம் வெற்றிகொள்ள உதவும் என்று இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

இதேவேளை பாகிஸ்தான் தொடர்ந்து இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கையினை எடுத்து வருகிறது. சீனாவின் நெருங்கிய கூட்டாளியாக இருந்து வரும் பாகிஸ்தான் தற்போது தனது போர்க் கப்பலை இலங்கை கடல் பகுதியில் நிறுத்தி உள்ளதற்கு இந்தியா கடும் எதிர்ப்பை தெரிவித்து இருக்கிறது.

இந்தியாவின் எதிர்ப்பை மீறி, இலங்கை துறைமுகத்தில் நிற்கும் சீனா, பாகிஸ்தான் கப்பல்களால் இந்திய கடற்படை உஷார்படுத்தப்பட்டு உள்ளது. இந்த கப்பல்களின் செயல்பாடுகளை இந்தியா உன்னிப்பாக கவனித்து வருகிறது.

## பரபரப்பை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஒருவரால் 50 லட்சம் ரூபா வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பணம் தொடர்பாக ரட்டா என்பவர் வங்கிக்கு முறைப்பாடு செய்துள்ளார். அத்தோடு, இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் இதனை யாராவது செய்திருக்க வேண்டும் என்று அவர் தெரிவிக்கின்றார்.

கோட்டா கோ ஹோம் செயற்பாடுகளின் உச்ச கட்டத்தின் போது இவர் உட்பட மேலும் மூவருக்கு பணம் அனுப்பி வைக்கப்பட்டதாக செய்திகள் வெளி வந்திருந்தன. அவை முற்றிலும் பொய்யானதெனவும் அவ்வாறு எந்தப் பணமும் தனக்கு வரவில்லை எனவும் மறுத்திருந்தனர்.

## ரஞ்சனுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

முன்னேற்பாடாக ரஞ்சன் ராமநாயக்க சனியன்று மன்னிப்புக் கோரும் கடிதத்தில் கைச்சாத்திட்டுள்ளார்.

இந்த ஆவணம் ஜனாதிபதிக்கும் நிதி அமைச்சருக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது. இந் நாட்களில் நீதிமன்றம் விடுமுறை இருப்பதனால் அடுத்த மாதமளவில் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு மன்னிப்பு வழங்கி விடுவிக்கப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணி சுற்றுலா அமைச்சர் ஹரீன் பெர்ணான்டோ இவரது விடுதலை குறித்து கூடிய அக்கறை காட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

## ஐ.நா...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பின் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவே இந்த நெருக்குதல்களை இலங்கை எதிர்நோக்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை இதற்காக இப்போது தயார் நிலையில் இருப்பதாகவும் வெளிவிவகார அமைச்சின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரகலயப் போராட்டக்காரர்களை அடக்குவதற்காக மேற்கொண்டுள்ளதாகக் கூறப்படும் சில நடவடிக்கைகள் குறித்து மனித உரிமைகள் அமைப்புகள் ஜெனிவாவில் முறைப்பாடு செய்துள்ளன. அதேபோன்று, பல சர்வதேச நாடுகளும் இலங்கைக்கு எதிராக பிரேரனைகளை முன் வைத்துள்ளதாக தெரிய வருகிறது.

அமைப்புக்கள் வழமையாக மேற்கொள்ளும் எதிர்ப்பு சார் நடவடிக்கைகளுக்கு மேலதிகமாகவே இந்த நடவடிக்கையும் எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சீனக் கப்பல் வருகைதரமுன்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

துறைமுகத்தை வந்தடையுமுன் இந்தியாவின் உளவு விமானமொன்று இலங்கையிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்திய விமானப்படைக்குச் சொந்தமான சோனியட் 228 என்ற இந்தக் கண்காணிப்பு விமானமே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் எதிர்வரும் 15ஆம் திகதி வைபவரீதியாக கையளிக்கப்படவுள்ளது.

இலங்கை கடற் பிராந்தியத்தின் கண்காணிப்பு பணிகளுக்காக 2 டோனியர் விமானங்களை வழங்குமாறு 2018 ஆம் ஆண்டு இலங்கை விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கவே இந்த விமானம் வழங்கப்படுவதாக அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாசகர்களே!

இப்பத்திரிகை குறித்தான உங்களது நேர்த்தியான கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றது.
உங்களது கருத்துக்கள் மற்றும் செய்திகளை கீழுள்ள மின்னஞ்சல் முகவரியூடாக அனுப்பி வைக்கவும்.

editor@newsplus.lk



### உலக அறிவிப்பாளர் பீ.எச். அப்துல் ஹமீட் இற்கு கனாடாவில் வரவேற்பு நிகழ்வொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

## புலம்பெயர்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கொள்வதற்காக முதற்கட்டமாக சில அமைப்புக்கள் மீதான தடைகளை நீக்கியுள்ளோம்."

- இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பொருளாதார நெருக்கடியால் வீழ்ச்சியடைந்த எமது நாட்டை மீளக் கட்டியெழுப்ப வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களின் உதவிகளைப் பெறுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார். நாடாளுமன்றத்தில் ஆற்றிய கொள்கை விளக்கவுரையில் இதனை அவர் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், புலம்பெயர் அமைப்புக்கள் மீதும் தனிநபர்கள் மீதும் தடையை வைத்துக்கொண்டு வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் உதவிகளை எதிர்பார்க்க முடியாது.

இதைக் கருத்தில்கொண்டே முதற்கட்டமாகச் சில புலம்பெயர் அமைப்புக்கள் மீதும் தனிநபர்கள் சிலர் மீதும் விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்க அரசு முடிவெடுத்துள்ளது.

தொடர்ந்து தடையில் உள்ள ஏனைய புலம்பெயர் அமைப்புக்கள் குறித்தும், தனிநபர்கள் தொடர்பிலும் அரசு அவதானம் செலுத்தும்" - என்றார்.

## கண்பார்வை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அவரது ஈரலுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இப்போது அவர் இயந்திர உதவியுடனே மூச்சு விடுகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சல்மான் ருஷ்தியின் சாத்தானிய வசனங்கள் எனும் நூல் காரணமாக முஸ்லிம் உலகில் அவர் பலத்த எதிர்ப்புக்குள்ளானார். 78 வயதான அவர் அமெரிக்காவில் தலைமறைவாகவே வாழ்ந்து வருகிறார். விரிவுரை ஒன்றை நடாத்தும் போதே இவர் இனம் தெரியாத நபர்களால் கத்திக் குத்துக்குள்ளாகினார்.



# பாகிஸ்தானின் 75ஆவது சுதந்திர தினம்





(அஷ்ரப் ஏ சமத்)
பாக்கிஸ்தான் நாட்டின் 75வது ஆண்டு சுதந்திர தினம் இன்றாகும். 14.08.2022 இதனை முன்னிட்டு கொழும்பில் உள்ள பாக்கிஸ்தான் உயர் ஸ்தாணிகர் ஆலயத்தின் பாக்கிஸ்தான் உயர் ஸ்தாணிகர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உமர் பாருக் புர்க்கி தலைமையில் நடைபெற்றது.
தற்போதைய இலங்கை நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மற்றும் பிரதம மந்திரி தினேஸ் குணவர்த்தன ஆகியோறின் தலைமையில் பாக்கிஸ்தான் நட்புறவுகள் மீண்டும் வலுப்படுத்தப்படுமெனவும் பாக்கிஸ்தான் உயர் ஸ்தாணிகர் அங்கு உரையாற்றினார்.

# சர்வகட்சி அரசு இணைய பிரதான கட்சிகள் மறுப்பு

## பாராளுமன்ற குழுக்கள் மூலம் ஒத்துழைப்பு

பிரதான சிறுபான்மைக் கட்சிகளும் ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி உட்பட தமிழ் கூட்டமைப்புடன் மேலும் பல கட்சிகள் சர்வ கட்சி அரசாங்கத்தில் பங்கேற்காதிருக்க தீர்மானித்துள்ளதாக நம்பத் தகுந்த அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி ரணில் தலைமையிலான சர்வ கட்சி அரசாங்கத்தில் பங்கேற்பதன் மூலம் எதிர்வரக்கூடிய தேர்தல்களில் மக்கள் எதிர்ப்புகளைச் சம்பாதிக்க வேண்டி ஏற்படும் என அஞ்சியே இக்கட்சிகள் இவ்வாறான முடிவுகளுக்கு வந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.
சர்வ கட்சி அரசில் இணையாமல் பாராளுமன்ற குழுக்கள் மூலம் அரச நிர்வாகத்தில் பங்கேற்று நாட்டின் முன்னேற்றத்திற்கான பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு இக்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சர்வ கட்சி அரசில் இணையாது பாராளுமன்ற குழுக்கள் மூலம் அரச பணிகளை முன்னெடுத்துச் செல்ல ஒத்துழைப்பு வழங்குவதாக அறிவித்துள்ளார்.
இதன் அடிப்படையிலேயே அரசாங்க நிதிக்குழுவின் தலைமை பதவிக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரான ஹர்ஷ டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.
முன்பு இப்பதவியை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியைச் சேர்ந்த அனுர பிரியதர்ஷன யாப்பா வகித்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும், அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் காங்கிரஸ், மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் முற்போக்கு கூட்டணி உட்பட மேலும் பல கட்சிகள் சர்வ கட்சி அரசில் இணைவதெனத் தீர்மானித்து அமைச்சுப் பதவிகள் தொடர்பிலும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## நளீமியாவின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கடிதத்தை கலாபீட பரிபாலனச் சபைத் தலைவர் யாகூத் நளீம் (11) கடந்த வியாழக்கிழமை வழங்கிவைத்தார்.

பல தசாப்தங்களாக இந்நிறுவனத்தின் பணிப்பாளராக கடமையாற்றிய கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரியின் மறைவிற்குப் பின்னர் பணிப்பாளர் பதவி வெற்றிடமாக இருந்தது.

அந்த வகையில், கலாபீடத்தின் முதல்வராக உஸ்தாத் அகார் முஹம்மத் நியமிக்கப்பட்டுள்ளார். முதல்வர் எனும் பதவி, புதிய கட்டமைப்பின் கீழ் கலாபீடத்தின் தலைமை நிர்வாகப் பதவியாக அமைகின்றது.

அஷ்ஷெய்க் ஏ.சி. அகார் முஹம்மத், இலங்கை முஸ்லிம் கல்வியியலாளர்களில் குறிப்பிடத்தக்கவர்.

இலங்கையின் இஸ்லாமிய அழைப்புப் பணியில் காத்திரமான பங்களிப்பினைச் செய்து வரும் இவர், மிகச் சிறந்த பேச்சாளர். இலங்கையின் முஸ்லிம் அறிஞர்களில் முதன் முதலாக தனக்கெனப் பிரத்தியேகமான இணையத்தைக் கொண்டவர் அஷ்ஷெய்க் அகார் முஹம்மத். இஸ்லாத்தின் அதிகார பிரதிகளில் இரண்டாம் நிலையாகக் கொள்ளப்படுகின்ற ஹதீஸ் துறையை தனது சிறப்புத் துறையாகக் கொண்டவர்.

அஷ்ஷெய்க் ஏ.சி. அகார் முஹம்மத், 1960ஆம் ஆண்டு ஏப்ரல் 23ஆம் திகதி இலங்கையின் வடமேல் மாகாணத்தில் குருணாகலை நகருக்கு அண்மையில் உள்ள “தோரயாய“ எனும் கிராமத்தில் பிறந்தார். இவரது தந்தை அப்துல் கரீம், தாயார் கமறுன் நிஹார். மூன்று சகோதரர்களையும் ஒரு சகோதரியையும் கொண்ட இவர், குடும்பத்தில் மூன்றாமவர். 1988ஆம் வருடம் திருமண பந்தத்தில் இணைந்த இவருக்கு ஓர் ஆண், இரு பெண் குழந்தைகள் உள்ளனர்.

தனது ஆரம்பக்கல்வியை தோரயாய அத்தாரிக் முஸ்லிம் வித்யாலயத்திலும் பின்னர் பக்மிகொல்ல அல்மினா முஸ்லிம் மகா வித்யாலயத்திலும் தெலியாகொன்ன ஹிஸ்புல்லா முஸ்லிம் மகா வித்தியாலயம் என்பவற்றிலும் பெற்றுக் கொண்ட அஷ்ஷெய்க் அகார் முஹம்மத், 1976ஆம் ஆண்டு தனது உயர்கல்வியை தொடர்வதற்காக பேருவளை ஜாமிஆ நளீமியா கலாபீடத்தில் பிரவேசம் பெற்ற இவர், 1983ஆம் ஆண்டு முதற்தர சித்தியுடன் நளீமியா பட்டச்சான்றிதழை பெற்றுக்கொண்டார். 1984ஆம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத்தின் (வெளிவாரி) பொதுக் கலைமாணிப் பட்டப்பரீட்சையில் 2ஆம் தர உயர் சித்தியடைந்தார். 1994ஆம் ஆண்டு முதுதத்துவமாணி பாடநெறிக்காக தன்னை பதிவு செய்து கொண்ட இவர், 1995ஆம் ஆண்டு அதன் எழுத்துப் பரீட்சையை வெற்றிகரமாக பூர்த்தி செய்த நிலையில் உள்ளார்.

இஸ்லாமிய எழுச்சி, சமூகமாற்ற தளங்களில் அக்கறைக்குரிய பல்வேறு விடயங்களில் பங்கெடுத்துள்ள இவர், தான் முன்வைக்கும் சிந்தனைக்கு முழுப்பொறுப்புள்ளவராக நடந்துகொள்கிறார். இஸ்லாமிய சிந்தனையில் நடுநிலைப் போக்கைக் கடைப்பிடிக்கும் இவர், பிரதான நீரோட்டத்தில் பணிபுரிவதையும் வேற்றுமையில் ஒற்றுமை காண்பதையும் வலியுறுத்தி வருகின்றார். இஸ்லாமிய அமைப்புக்களுக்கிடையில் இடைவினையாற்றுதல், சகஜீவன நிலை நின்று இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல், பல்வேறு நாகரிக, மதப் பண்பாடுகளுக்கிடையில் உரையாடல்களை நிகழ்த்துதல் இவரது அக்கறைக்குரிய விடயங்களாகும்.

இஸ்லாமியத்துறையை அதன் நியமங்களுக்கேற்பவும் அந்த நியமங்களிலிருந்து வழுவாமலும் அதற்குரிய ஒழுகலாற்று நடைமுறையை மீறாமலும் கொண்டு செல்லும் (னுளைஉிடைநெ) இவர் எழுத்துக்களிலும் பேச்சுக்களிலும் அடிநாதமாக விளங்குகின்றது. அதாவது விதிமுறை நோக்கு தவறா பயில்முறையே இவர் கடைபிடிக்கும் நடைமுறையாகும்.

எளிமை, தெளிவு, மரபில் புத்துயிர்ப்பாக்கம், சர்வதேசத்தன்மை இவர் எழுத்திலும் பேச்சிலும் விரவிக்கிடக்கும் ஆளுமைப்பண்புகளாகும்.

அஷ்ஷெய்க் அகார் முஹம்மத் மாணவப் பருவம் முதலே இஸ்லாமிய அழைப்புப் பணியில் தீவிர ஈடுபாடு கொண்டவர். இலங்கை இஸ்லாமிய தஃவா களத்தின் முன்னோடி தாஈகளில் ஒருவர். தமிழ், சிங்களம், அரபு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமையுள்ள இவர், நாடறிந்த பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் தஃவா பயிற்றுவிப்பாளராகவும் அறியப்பட்டுள்ளார். இஸ்லாமிய தஃவா தொடர்பில் பல்வேறு நாடுகளுக்கும் பயணங்களை மேற்கொண்டுள்ளார்.

நளீமிய்யாவின் முத்திங்கள் வெளியீடான இஸ்லாமிய சிந்தனையின் முன்னால் நிர்வாக ஆசிரியரான இவர், தற்போது அதன் ஆலோசனைக் குழு உறுப்பினராக இருந்து வருகிறார். தேசிய நாளிதழான தினகரனிலும் இவரது கட்டுரைகள் அவ்வப்போது வெளிவந்துள்ளன.

இவர் இஸ்லாமிய சிந்தனையில் தொடராக எழுதிய ஹதீஸ் விளக்கம், பிக்ஹுஷ்ஷரிஆ, வானொலி முஸ்லிம் சேவை உரைகள் பின்னர் நூல்களாக வெளிவந்துள்ளன.

இஸ்லாமிய சிந்தனைத் தெளிவை வழங்கும் வகைளில் இவர் எழுதியுள்ள நூல்களான நபிவழி 1,2, சன்மார்க்க சட்டவிளக்கம், இஸ்ரா, மிஃராஜ் ஒரு புதிய பார்வை, கல்வி, கற்றல், கற்பித்தல் இஸ்லாமிய நோக்கு, ஹலால், ஹராம் விதிமுறைகளும் உணவு, உடை வரையறைகளும், நாளும் ஓத நபிகளாரின் திக்ருகள், நபிவழி, சன்மார்க்க சட்டவிளக்கம், கல்வி கற்றல் கற்பித்தல் ஆகிய நூல்கள் வாசகர் வரவேற்பைப் பெற்றுள்ளடன் பல பதிப்புக்களையும் கண்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

எமது ஆசிரியர் குழுமம் சார்பாக நாமும் எமது வாழத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அரங்கம்

(நஸ்மின்)

கடந்த நான்கு மாதங்களாக மாதத்தில் 9ஆம் திகதி எல்லோரதும் அவதானத்திற்குள்ளாகிய நாளாக இருந்தது. ஆகஸ்ட் மாதம் 9ஆம் திகதி அவ்வாறு மக்கள் அவதானத்திற்குரிய நாளாகவே இருந்தது.

அரகலயவும் ஆகஸ்ட் 9உம்

மஹிந்த ராஜபக்ஷ, பெசில் ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய மூவரும் தன் பதவிகளை இழந்த நாள் மே, ஜூன், ஜூலை 9ஆம் திகதிகளாகும். அதேபோன்று, இம்மாதம் 9ஆம் திகதியும் யாரும் பதவியை விட்டு வெளியேறுவார்களா? அல்லது வெளியேற்றப்படுவார்களா? என்ற எதிர்பார்ப்புக்கு மத்தியிலே 9ஆம் திகதி கழிந்தது. அரகலய போராட்டக்காரர்கள் ஆரம்பித்த கோட்டா கோ ஹோம், ரணில் கோ ஹோம் போராட்டம் 9 ஆம் திகதியாகும் போது உச்சகட்டத்திற்கு வந்திருக்கவில்லை.

பொதுமக்கள் ஆதரவு குறைந்ததன் காரணமாக காலி முகத்திடலில் கோட்டா கோ ஹோமிலிருந்த அரகலய போராட்டக்காரர்கள் பெரும் தொகையினர் வெளியேறத் தொடங்கினர். நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்குகளை வாபஸ் பெறுவதற்கு அரகலய போராட்டத்தின் ஒரு குழுவினர் தீர்மானித்து வழக்குகளை வாபஸ் பெற்றனர். 10 ஆம் திகதியாகும் போது போராட்டக்காரர்கள் கூடுதலான பேர் தமது முகாம்களை அகற்றிக்கொண்டு வெளியேறினர். அரக்கலய போராட்டக்காரர்கள் பெரும்பாலானோர் வெளியேறத் தீர்மானித்தபோது சுமார் 20 பேரளவு ஏழு, எட்டு முகாம்களை அமைத்து அங்கு தங்கி வருகின்றனர். தாமே உண்மையான அரகலயப் போராட்டக்காரர்கள் என்று கூறும் எஞ்சியிருக்கும் ஏனையவர்கள் அரகலய போராட்டத்தைத் காட்டிக் கொடுத்தவர்கள் கூறி வருகின்றனர். காலி முகத்திடலிருந்த கூடாரங்களை அகற்றும் அங்கு பொருத்தப்பட்டிருந்த தற்காலிக கழிப்பறைகளையும் அகற்ற முற்பட்டபட்ட போது இரு தரப்பினருக்குமிடையே சூடான வாக்குவாதம் இடம்பெற்றது. 9ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பத்திரமுல்லையிலுள்ள அகுரே கொடையிலுள்ள இராணுவ தலைமையகத்துக்கு விஜயம் செய்து பாராளுமன்றத்தைப் பாதுகாத்த படை வீரர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

ஜனாதிபதியைப் பொறுத்தவரை ஆரம்பம் முதல் தனது செயற்பாடுகளைப் படையினரைக் கவரும் விதத்திலேயே மேற்கொண்டு வருவதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. பாராளுமன்றத்தில் இடம்பெற்ற ஜனாதிபதித் தெரிவில் வெற்றி பெற்றவுடன் பாராளுமன்றத்தைச் சுற்றி பாதுகாப்பிலீடுபட்ட படை வீரர்கள் மற்றும் பொலிஸ் வீரர்களுக்கு நன்றி தெரிவித்து விட்டே வெளியேறினார்.

அடுத்து பாராளுமன்றத்தில் கொள்கை உரையை நடத்திய பின்பும் நேரடியாகப் படைத் தலைமையத்துக்குச் சென்று அங்கு இடம்பெற்ற கூட்டங்களில் கலந்து கொண்டார். அது மட்டுமன்றி, பதவியேற்ற தினத்தில் பாராளுமன்றத்துக்கு அருகே இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது காயத்துக்குள்ளான படை வீரர்களைச் சுகம் விசாரிக்கச் சென்றிருந்தார். காயமடைந்த படை வீரர்களுக்கு உச்சபட்ச சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் நிதிப் பிரச்சினை அதற்குத் தடையாக அமையக்கூடாது என்றும் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார். இராணுவத் தலைமையகம் நவீன வசதிகளை உள்ளடக்கி பென்டகன் போன்று அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### அரகலயக்காரர்களுக்காக வாதாடிய சுமந்திரன்

கோட்டா கோ ஹோம் போராட்ட பூமியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த நிர்மாணங்களை அகற்றுவது தொடர்பாக மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் நான்கு உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இந்த உரிமை மனுக்கள் காரணமாக அரசாங்கம் அரகலய போராட்டக்காரர்களுக்கு விதித்திருந்த கால எல்லை நீடிக்கப்பட்டது. போராட்டக்காரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆஜராகி வழக்குகளைத் தொடர விரும்பவில்லை எனத் தெரிவித்தார்.

புதிய பாணியில் செல்லும் ரணில்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் கொள்கை உரையை நிகழ்த்திய பின் ஒத்திவைத்த பாராளுமன்ற அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமையும் புதன்கிழமையும் வெள்ளிக்கிழமையும் நடைபெற்றது. புதன்கிழமை பாராளுமன்றத்திற்குச் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, லொபியில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் அரசியல் விவகாரங்கள் மற்றும் நாட்டு நடப்புகள் பற்றி கலந்துரையாடும் போது அந்த கலந்துரையாடலிலும் பங்குபற்றி மொட்டுக்கட்சி உறுப்பினர்களுடன் நாட்டு விவகாரங்கள் பற்றியும் கலந்துரையாடியதாக லொபி தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேநேரம் கொள்கை உரை நிகழ்த்தப்பட்ட தினம் வழங்கப்பட்ட தேநீர் விருந்துபசாரத்தின் செலவுகளுக்கான பணத்தை ஜனாதிபதி தனது தனிப்பட்ட நிதியிலிருந்து புதனன்று வழங்கியுள்ளார்.

ஜனாதிபதியின் பாராளுமன்ற விவகார இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அசு மாரசிங்க 2 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாவை பாராளுமன்றத்துக்குச் செலுத்தியுள்ளார். கொள்கை உரை இடம்பெற பாராளுமன்ற புதிய கூட்டத்தொடரை ஆரம்பிப்பது போன்ற நிகழ்வுகளுக்கு வரும் அதிதிகளுக்கு வழங்கும் விருந்துபசாரத்தை இவ்வளவு காலமாக பாராளுமன்றமே ஏற்றுள்ளது.

அரக்கலய போராட்டம் காரணமாக தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருந்த மொட்டுக் கட்சியினர் இப்போது அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். சில தினங்களுக்கு முன் மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பெசில் ராஜபக்ஷ உட்பட முக்கியஸ்தர்கள் புதிய பிரதமர் தினேஷ் குணவர்தனவைச் சந்தித்து தம் வாழ்த்துக்களை தெரிவித்தனர். அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான எம்.ஈ.பி. எனப்படும் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவராவார். இதேபோன்று, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்காலத்தில் பொதுஜன பெரமுன உறுப்பினர்களைச் சந்திப்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.







ஒரே வாரத்தில் தமிழ் பத்திரிகை ஆசிரியர்களை புறம்பாக சந்தித்த மஹிந்த - நாமல்

இதேநேரம் பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் சில தினங்களுக்கு முன்னர் தமிழ் பத்திரிகை ஆசிரியர்களைச் சந்தித்து கருத்து பரிமாறிக் கொண்டனர். மஹிந்த ராஜபக்ஷ தமிழ் பத்திரிகை ஆசிரியர்களிடம் நாட்டின் நிலை குறித்தும் குறிப்பாக வடக்குக் கிழக்கின் நிலை பற்றியும் கேட்டறிந்துள்ளார். வடக்கு ஆளுனருக்கும் மக்கள் மத்தியில் இருக்கின்ற இருப்பு பற்றியும் இங்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. மஹிந்த ராஜபக்ஷ தொடர்ந்து அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு ஆர்வம் காட்டும் விதத்தில் கருத்துத் தெரிவித்துள்ளார். யுத்தத்தை நீங்கள் முடித்தீர்கள். அதேபோன்று, தேசிய பிரச்சினைக்கும் தீர்வு காண்பதற்கு நீங்களே தலைமைத்துவம் வழங்க வேண்டும் என்ற தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர் ஒருவர், முன்னாள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### ஜீவன் தொண்டமானுக்கு இளைஞர் விவகார அமைச்சு

தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்களைக் கடந்த செவ்வாயன்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவைச் சந்தித்துள்ள கொழும்பு ஏழிலுள்ள அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தளத்திலே இச்சந்திப்பு இடம்பெற்றது. இராப்போசன விருந்துபசாரத்துடன் இடம்பெற்ற இச்சந்திப்பில், நாமல் தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்களுடன் மனம் திறந்து பேசியுள்ளார். எதிர்வரும் 18 ஆம் திகதி இடம்பெறவுள்ள பொதுஜன பெரமுனவின் வருடாந்த மாநாட்டின் போது நாமல் முன்னணியின் முக்கிய பொறுப்பை ஏற்கவுள்ள நிலையில், முன்னணியினை தமிழ், முஸ்லிம் மக்கள் கவரும் விதத்தில் கட்டி எழுப்புவது பற்றியும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

### ரணிலே பொருத்தமானவர் என்கிறார் நாமல்

ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாக்குவதில் நாமல் முக்கிய பங்களிப்புச் செய்தது பற்றி பத்திரிகை ஆசிரியர் ஒருவர் கேட்ட போது இந்தத் தருணத்தில் நாட்டுக்குப் பொருத்தமானவர் ரணில் விக்கிரமசிங்கவே என்றார். உண்மையிலே எனது தந்தை ஜனாதிபதியாக இருக்கும்போதே இவர் பிரதமராகியிருந்தால் நாட்டுக்கு நிறைய வேலை செய்திருக்கலாம் என்று தெரிவித்துள்ளார். பொதுஜன பெரமுனவிற்கு தமிழ், முஸ்லிம் இளைஞர்களைக் கவரும் வகையில் எதிர்கால நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என தெரிவித்த நாமல், ஜீவன் தொண்டமான் போன்றவர்களுக்கு நாட்டின் தேசிய விவகாரங்களைக் கையாளும் பொறுப்பு ஒப்படைக்கப்பட வேண்டும். ஜீவனுக்கு இளைஞர் விவகார அமைச்சை ஒப்படைத்தால் தெற்கில் அவர்களுக்கு வேலை செய்யக்கூடியதாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களின் பிரச்சினை ரணிலிடம்

சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இவ்வாரத்திலும் பல கட்சி பிரதிநிதிகளைச் சந்தித்துரையாடினார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தூதுக்குழுவினரை புறம்பாகச் சந்தித்து உரையாடியுள்ளார்.

முஸ்லிம் சமூகம் நீண்ட காலம் எதிர்நோக்கி வரும் பல பிரச்சினைகளை இரு கட்சிகளும் முன்வைத்துள்ளன. "ஒரே நாடு ஒரு சட்டம்" தொடர்பாக அச்செயலணியின் தலைவர் ஞானசார தேரர் முன்னாள் ஜனாதிபதிக்கு கையளித்த அறிக்கை தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஜனாதிபதியின் அவதானத்திற்குக் கொண்டு வந்துள்ளார். இந்த அறிக்கையை தான் ஏற்கப்போவதில்லை என்று ரணில் தெளிவாகத் தெரிவித்துள்ளார். பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்குவது குறித்தும் ஹக்கீம் கருத்துக்களை முன்வைத்துள்ளதோடு, அரகலயப் போராட்டக்காரர்களை கைது செய்வதை உடன் நிறுத்துமாறு மு.கா. தூதுக் குழு ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளது.

### ஜாக்சன் அந்தனியைப் பார்த்த மஹிந்த

யானை தாக்கி கடும் காயங்களுக்குள்ளாகி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் பிரபல நடிகர் ஜாக்சன் அந்தனியை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வைத்தியசாலைக்குச் சென்று சுகம் விசாரித்துள்ளார். கடந்த வியாழனன்று வைத்தியசாலைக்கு விஜயம் செய்த மஹிந்த ராஜபக்ஷ, "ஜாக்சனை குணப்படுத்துவதற்கு எது செய்ய வேண்டுமோ அதனைக் கூறுங்கள் நான் தயாராக இருக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார். ஜாக்சனின் கழுத்தில் இருக்கும் முள் உடைந்து உள்ள நிலையில் அவரது உயிரைப் பாதுகாப்பதற்கு டாக்டர்கள் போராடி வருகின்றனர்.

### திருமணத்தில் அரசியல் தலைவர்கள்

மக்கள் காங்கிரஸின் பிரதித்தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியும் முன்னாள் பாகிஸ்தான் உயர் ஸ்தானிகருமான என். எம். சஹீடின் மகளின் திருமணம் போயா தினத்தன்று கொழும்பில் இடம்பெற்றது. அரசியல் பிரமுகர்கள், சட்ட அறிஞர்கள் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்ட இந்தத் திருமண விருந்துபசாரத்தில் பிரதம நீதியரசர் மற்றும் நீதவான்கள், முன்னணி சட்டத்தரணிகள் பலரும் கலந்து கொண்டனர். அமைச்சர்களான நஸீர் அஹமட், அலி சப்ரி, பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், றிஷாத் பதியுதீன், முஜிபுர் ரஹ்மான், எச்.எம்.எம். ஹரீஸ், இஷாக் ரஹ்மான், எம்.எஸ்.தௌபீக் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# வன்முறை, தீவிரவாதத்துக்கு எதிரான வீதி நாடகம்!



(பைஷல் இஸ்மாயில்)

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாணவர்களால் வழங்கிய "வன்முறை ராசா" வீதி நாடகம் அட்டாளைச்சேனை பிரதான வீதியில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

பண்பாட்டு வாழ்வியலின் ஊடாக நல்லிணக்கத்தை கொண்டு வருதல், வன்முறை தீவிரவாதத்தில் இருந்து விடுபடுவதற்கு மனிதர்கள் எடுக்கின்ற முன்னெடுப்புகளும் செயற்பாடுகளும் இயல்பான பண்பாட்டு நடவடிக்கைகளும் இந்நாடகத்தின் கருவாக அமைந்தது.

மேலும் சாதியல் பிரிவினைகளை ஏற்படுக்காது அனைவரும் வன்முறையற்ற வாழ்க்கையை வாழ்வதுடன் சுமுகமான வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதே அதன் வெளிப்பாடாக அமைந்திருந்தன.

இறுதியில் அனைவரும் ஒற்றுமையாகவும் வன்முறையற்ற வாழ்க்கையை வாழ்வதற்கு நல்லிணக்கத்தின் முக்கியத்துவதங்களையும்

மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அமைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளையும் அதனால் நாளாந்தம் மக்கள் அனுபவிக்கும் சவால்களையும் பேசுகின்றது.

# வாழும் போதே வாழ்த்துவோம் கௌரவிப்பு நிகழ்வு!





(எச்.எம்.எம்.பர்ஸான்)

கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இக்பால் சனசமூக நிலையத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு "வாழும் போதே வாழ்த்துவோம்" கௌரவிப்பு நிகழ்வு கடந்த (9) ஆம் திகதி இடம்பெற்றது.

இக்பால் சனசமூக நிலைய தலைவர் ஏ.எல்.லியாப்தீன் தலைமையில், கிறிசலிஸ் நிறுவனத்தின் அனுசரணையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில், வாழைச்சேனை இக்பால் சனசமூக நிலைய நிர்வாக எல்லைக்குட்பட்ட கல்விமான்கள், சமூக சேவையாளர்கள், விளையாட்டு, கலைத்துறை செயற்பாட்டாளர்கள், சுகாதார, பாதுகாப்பு, சுயதொழில் துறைசார்ந்த மூத்த, இளம் ஆளுமைகள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன், பிரதேசத்தின் மேம்பாட்டுக்காக சேவையாற்றி வரும் கோறளைப்பற்று பிரதேச சபை தவிசாளர், செயலாளர், சனசமூ அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவையாளர் ஆகியோர் இக்பால் சனசமூக நிலையத்தின் நிர்வாகிகளால் பாராட்டி நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், அதிதிகளாக வாழைச்சேனை பிரதேச சபை தவிசாளர் சோபா ஜெயரஞ்சித், பிரதேச சபை உறுப்பினர் எம்.பி.எம். தையூப், வாழைச்சேனைபிரதேச சபையின் செயலாளர் எஸ்.நவநீதன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.ஹாரூன், காவத்தமுனை மில்லத் வித்தியாலய அதிபர் எச்.எம்.இஸ்மாயில், வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய அதிபர் என்.சஹாப்தீன், பி.எம்.இஸ்மாயில் ஜே.பி, கே.சுபைர் ஆசிரியர், நூலகர் கே.பிரேம் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



NEWS PLUS
WWW.NEWSPLUS.LK
2022 AUGUST 14 - SUNDAY
Email: editor@newsplus.lk
FB: newsplustamil

# அரசியல் அமைப்பிற்கான திருத்தங்கள் மக்களுக்கு பூச்சாண்டி காட்டுவதற்காக அல்ல

நாட்டில் தொடரும் பொருளாதார நெருக்கடிக்கு ஸ்தீரமான தீர்வொன்றை காண்பதற்காக அரசியல் ஸ்தீர நிலையை ஏற்படுத்தும் நோக்கில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளையும் பிரதிநிதி த்துவப்படுத்தும் சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தும் முயற்சி இதுவரையில் இணக்கப்பாட்டை அடையவில்லை. அதற்கான முன்னெடுப்புக்கள் தொடர்பிக்னறன.

இதற்கிடையில் கடந்த 2022.08.10 ஆம் திகதி புதன்கிழமை நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் அமைப்பிற்கான 22 ஆவது திருத்தம் தொடர்பான விடயமும் இந்த தேசிய அரசாங்கத்தை ஏற்படுத்துவதில் செல்வாக்கு செலுத்துவதாக அமைகின்றதை அவதானிக்க முடியகின்றது. அரசியல் அமைப்பிற்கான 19 ஆவது திருத்தம் ஒருசில விடயங்களை மாத்திரம் தவிர 20 ஆவது திருத்தமாக முன்னைய இரண்டு வருடகால ஆட்சி காலத்தில் திருத்தம் செய்யப்பட்டது. அதன்படி 20 ஆவது திருத்தமானது முன்னால் ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷவின் அரசியல் வியூகங்களுக்கு தேவையான முறையில் விடயங்களை உள்ளடக்கியதாகவே திருத்தம் செய்யப்பட்டது.

அதே 19 ஆவது திருத்தத்தில் உள்ளடங்கி இருந்த 20 இல் நீக்கப்பட்ட விடயங்களை மீண்டும் உற்படுத்தியும் மேலும் சில புதிய விடயங்களை உள்ளடக்கியதாகவும் இந்த புதிதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள 22 ஆவது திருத்தம் அமைகின்றது. ஆனாலும் தற்போது 22 இல் உள்ளடக்கப் பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன. குறிப்பாக தேசிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துகின்ற போது அதில் இணைகின்ற கட்சிகளால் முன்வைக்கப்படுகின்ற நிபந்தனைகளில் முக்கியமானவையாக அமைவது அமைச் சரவை பதவிகளுக்கான கோரிக்கையாகும். சுர்வக கட்சி அரசில் இணையும் பொது அந்தந்த கட்சிகளுக்கு போதுமான அமைச்சர் பதவிகளை பகிரும் பொது 30 அமைச்சர் பதவிகளை எத்தனைபேருக்கு பகிர.

அதனால் அதற்கு ஏற்ப அமைச்சரவை எண்ணிக்கையை 30 இல் இருந்து அதற்கு அப்பாலும் கட்சிகளின் இணக்கத்துடன் அதிகரிக்க செய்வதற்கான பிரிவு உள்ளடக்க ப்பட்டிருக்கின்றது.

நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி ஜனாதிபதி பிரதமரை நீக்குவது தொடர்பாக இருக்கின்ற அதிகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப் பட்டிருக்கின்றது. தற்போது நாடாளு மன்றத்தில் இயங்குகின்ற சபையை அரசியல் அமைப்பு சபையாக மாற்ற உத்தேசம்.

இரட்டை பிஜா உரிமை பெற்றுள்ள ஒருவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அந்தஸ்தை பெற முடியாது என்று 19 ஆவது திருத்தத்தில் இருந்து நீக்கப்பட்ட விடயம் மீண்டும் உட்படுத்தப் பட்டிருக்கின்றது.

அப்போது பெசில் ராஜபக்ஷவை உள்ளே எடுக்கவும் அமைச்சர் பதவி கொடுக்கவும் தேவையான ஒழங்கமைப்பை அரசியல் அமைப்பின் ஊடாக செய்வதாக அன்றைய 20 ஆவது திருத்தம் அமைந்ததை பார்ர்தோம். இப்போது அத்தகையவர்கள் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க முடியாது என்று மீண்டும் உட்படுத்துவது மீண்டும் பெசில் வருவதை தடுப்பதற்காகவா என்ற கேள்வி எழுகின்றது.

எவ்வாறாயினும் அரசியல் அமைப்பிற்கான திருத்தங்கள் நாட்டு நலனை கருத்தில் கொண்டதாகவும் நாட்டின் இறைமை, தன்னாதிக்கம் என்பவற்றை பாதுகாத்து பொருளாதார சுபீட்சம், மக்களது வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்ததல், அடிப்படை உரிமைகளை பாதுகாத்தல் ஆகிய குறிக்கோள்கைள கொண்டதாக அமையாமல் காலத்திற்கு காலம் ஆட்சியாளர்கள் அவரவர் கையாடல்களுக்கு தேவையான ஒழுங்குகளை செய்வதற்காகவே திருத்தங்களை சமர்ப்பித்து வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறான செயல் அரசியல் அமைப்பு என்று கூறிக்கொண்டு மக்களுக்கு காலத்திற்கு காலம் ஆட்சியர்ளர்கள் பூச்சாண்டி காட்டுவதாகவே அமைகின்றது.

அரசியல் அமைப்பிற்கான 19 ஆவது திருத்தம் முன்வைக்கப்பட்ட போதும் அப்போதைய நல்லாட்சி அரசாங்கத்தில் ஜனாதிபதியாக இருந்த மைத்திரி பாலவிடம் இருந்து அப்போதைய பிரதமராக இருந்த ரனில் விக்கிரமசிங் காவையும் அவரின் கீழான அமைச்சரவையையும் பாதுகாத்து ஆட்சியை இடையில் கவிழ்க்காமல் இருப்பதற்கான ஏற்பாடுகளாகவே அந்த திருத்தத்தின் பின்னணி அமைந்திருந்தது.

அதற்கு முன்னர் 18 ஆவது திருத்தமும் அன்றைய மஹிந்தராஜபக்ஷ ஆட்சியில் அந்த ஆட்சியாளர்களின் தேவையை நிறைவு செய்வதாகவே அமைந்திருந்தது. பின்னர் 19 இற்கு பதிலாக வந்த 20 ஆவது திருத்தமும் அதே பின்னணியிலே அமைந்திருந்தது. இதற்கிடையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை நீககப்பட வேண்டும் என்று 21 ஆவது திருத்தமும் இருக்கின்றது. அது வெறும் மசோதாவாகவே அமைந்தது.

நல்லாட்சி நிலவிய 2015 - 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேனா மூன்றாவது குடியரசு யாப்பை ஏற்படுத்தவது என்று கூறிக்கொண்டு அரசியல் அமைப்பை முற்றாக மாற்றுவதென்று ஒரு வருட காலத்தை வீனடித்தார்.

நாடளாவிய ரீதியதில் அரசியல் அமைப்பை திருத்துவதற்கான குழு விஜயங்களை மேற்கொண்டு 3800 பேருக்கும் மேற்பட்டவர்களது கருத்துக்களை பெற்று தயாரித்த அறிக்கை இறுதியில் உயிர் வடிவம் பெறாமலே குப்பைக் கூடைக்குள் போடப்பட்டது.

இவ்வாறான ஒரு நிலையிலே 22 ஆவது திருத்த மசோதாவை விஜேதாச ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். விவாதம் தொடர்பான நாள் குறிக்கப்படவில்லை. எத்தகைய திருத்தமானாலும் அது தொடர்பாக அரசியல் கட்சிகள் விரிவாக ஆராய்ந்து போதுமான கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகின்றது. அது தொடர்பான பொதுமக்கள் அபிப்பிராயங்கள் கவனத்தில் எடுகக்பட்ட பின்னரே அரசாங்கம் நிறைவேற்றுவது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். இத்தகைய அரசியல் அமைப்பிற்கான திருத்தங்கள் அவ்வப்போது நாடு எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை திசை திருப்புவதற்கான உத்திகளாக அல்லது மக்களை ஏமாற்றும் மாயாஜால வித்தையாக அமையக் கூடாது.

# சர்வதேசத்தை திருப்திப்படுத்தும் மாயையே சர்வகட்சி அரசை உருவாக்கும் திட்டம்

## – பாராளுமன்றில் இம்ரான் எம்.பி.



(ஹஸ்பர்)

இன்று இந்த அரசாங்கம் 134 உறுப்பினர்களை வைத்துக்கொண்டு சர்வகட்சி அரசாங்கமொன்றை உருவாக்குவதற்கு ஏன் முயற்சிக்கின்றார்கள் என்ற சந்தேகம் எழும்புவதாகவும் இதன் பின்னணியில் சர்வதேசத்தை திருப்திப்படுத்தும் மாயை இருப்பதாகவும் புதன்கிழமை (10) பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

இந்த அரசாங்கத்தின் மீது சர்வதேசம் நம்பிக்கையிழந்து காணப்படுவதால் ஐஆகு, மத்திய கிழக்கு நாடுகள் உதவமுடியாது என்று கூறியிருக்கின்றன. ஏனைய வெளிநாட்டு உதவிகள் தடை செய்யப்பட்டுள்ளன. ஆகையால், சர்வகட்சி அரசாங்கம் என்ற விடயத்தை உருவாக்கி சர்வதேச நாடுகளுக்கு ஒரு மாயையை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக இவ்வாறான பேச்சுக்கள் நடைபெறுகின்றன. இந்த சர்வகட்சி அரசாங்கத்திலே எங்களுடைய எதிர்கட்சியும் தயாராக இருக்கிறது. ஆனால், அமைச்சுப்பதவிகள் பெற்றுக்கொள்ளாமல் பாராளுமன்றத்தில் உதவுகின்ற அதேவேளை, நல்ல விடயங்களுக்கு ஆதரவளிப்பதற்கும், இந்த அரசாக்கத்தை வழிநடாத்தி உதவுவதற்கும் எங்களுடைய கட்சியின் தலைவரும் நாங்களும் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

மேலும் அவருடைய உரையில்,

திருமலை மாவட்டத்தில் வாழ்கின்ற மீனவர்கள் தங்களின் தொழிலைச் செய்வதற்கு போதியளவு மண்ணெண்ணை கிடைக்காமல் அல்லல் படுகின்றனர் என்ற விடயத்தையும் தொடர்புடைய அமைச்சருக்கு தெரியப்படுத்தினார்.

# புதிய சமுர்த்தி வங்கி கட்டிட நிர்மாணத்திற்கு அடிக்கல் நடல்



(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சமுர்த்தி வங்கிக்கான புதிய கட்டிட நிர்மாணத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு முள்ளிப்பொத்தானையில் இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் சனிக்கிழமை (13) காலை இடம்பெற்ற இவ் அடிக்கல் நடும் நிகழ்வில், திருகோணமலை மாவட்ட செயலாளர் பி.எச்.என். ஜயவிக்ரம பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார். மத அனுஷ்டானத்துடன் இடம்பெற்ற கட்டிட நிர்மாண அங்குரார்ப்பண வைபவமானது சுப நேரப்படி காலை 10.22 க்கு அங்குராரப்பணம் செய்து வைக்கப்பட்டது. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் ஊடான நிதி ஒதுக்கீட்டின் கீழ் சுமார் 90 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இவ் சமுர்த்தி வங்கிக் கட்டிடமானது திருகோணமலை கண்டி பிரதான வீதி முள்ளிப்பொத்தானையில் உள்ள வங்கிக்கு சொந்தமான காணியில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

குறித்த நிகழ்வில், தம்பலகாமம் பிரதேச சபை தவிசாளர் ஏ.ஜீ.சம்பிக்க பண்டார, மாவட்ட சமுர்த்தி திணைக்களப் பணிப்பாளர் எஸ்.சுதீஸ்னர், மாவட்ட செயலக பிரதம கணக்காளர் எஸ். பரமேஸ்வரன், மாவட்ட செயலக பிரதம பொறியியலாளர் கே.நபீல், தம்பலகாமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சித்திக், வங்கி முகாமையாளர் எம்.ஏ.ஹஸ்புல்லா உட்பட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# தெளிவுக்கான தேடல்

**வாசகர்களே!**

உங்கள் பிரதேசங்களிலுள்ள பொதுவான பிரச்சினைகளையும் நியூஸ்ப்ளஸ் இன் தெளிவுக்கான தேடல் பகுதியூடாக வெளிக்கொண்டுவரலாம்.

செய்திக்குப் பொறுப்பானவரின் அங்கீகாரக்கடிதத்துடன் உங்கள் கட்டுரையையும் இணைத்து **editor@newsplus.lk** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.



செ.திவாகரன்
நானுஓயா

# பிரதான வீதியில் சுற்றித்திரியும் மட்டக்குதிரைகள்

## நுவரெலியாவில் அவதி!



நுவரெலியா - பதுளை உள்ளிட்ட பிரதான பாதைகளில், மட்டக்குதிரைகள், மாடுகள், தெரு நாய்கள் நடமாட்டம் அதிகமாகவுள்ளதால் வாகனப் போக்குவரத்தில் சிரமம் ஏற்படுவதாகவும், அதிக விபத்துகளுக்கு காரணமாக இருப்பதாகவும், இவற்றை கட்டுப்படுத்த உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்களும் , வாகன சாரதிகளும் வலியுறுத்துகின்றனர்.

நுவரெலியாவில் பிரதான நகரில் அதிகமான விபத்துகள் தொடர்ந்து நிகழ்கின்றன வாகனங்கள் நேருக்கு நேர் மோதல், வேகத்தடையில் தடுமாறி விழுதல் போன்றவற்றால் ஏற்படும் விபத்து எண்ணிக்கையை காட்டிலும், பிரதான பாதைகளில் சுற்றி திரியும் மட்டக்குதிரைகள், மாடுகள் தெரு நாய்களின் மீது மோதி ஏற்படும் விபத்துகளே அதிகம் நிகழ்கின்றன.

இரவு நேரத்திலும் ஆங்காங்கே அதிகமான மட்டக்குதிரைகள் கூட்டமாக சுற்றித்திரிகின்றன இதனால் நுவரெலியாவிற்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு அச்சத்தை ஏற்படுத்துவதாக தெரிவிக்கின்றன

மட்டக்குதிரைகளை வளர்ப்பவர்கள் தினமும் காலையில் மேய்ச்சலுக்கு விட்டுவிட்டு, மாலையில் மீண்டும் வீட்டில் கட்டிவைப்பதில்லை. நுவரெலியா பிரதான பகுதிகளில் பாதை ஓரங்களில் பெரும்பாலான இடங்களில் மின் விளக்குகள் எரியவில்லை. இருள் சூழ்ந்த பகுதியில் நிற்கும் மட்டக்குதிரைகள் தெரியாமல், வாகன சாரதிகள் அதன் மீது மோதி விபத்தில் சிக்கிக்கொள்கின்றனர். விபத்தில் இறப்பு வீதம் குறைவு என்றாலும், மோட்டார் சைக்கிள் வாகனத்தில் செல்வோர் மோதி, கை கால் முறிவு, தலையில் பலத்த காயம் போன்ற வற்றால் வைத்தியசாலைக்கு செல்லும் நிலை தினமும் ஏற்படுகின்றது.

இதற்கு பிரதான காரணியாக விளங்குவது சாலையில் நடமாடும் கால்நடைகளேயாகும்

விபத்தில் மனிதர்களுக்கு ஏற்படும் பாதிப்புபோல லொறி, போன்றவற்றில் மோதி கால்நடைகளும் இறக்கும் நிலையும் ஏற்படுகின்றது.

இவ்வாறான இழப்பு குறித்து கால்நடை வளர்ப்போர் கண்டுகொள்வதும் இல்லை.

இவ்வாறு பிரதான வீதியில் சுற்றி திரியும் மட்டக்குதிரை சிறுத்தையின் தாக்குதலில் பலி சம்பவமும் உள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டு



நுவரெலியா, கல்வேஸ் பகுதியை அண்மித்து இரை தேடி சென்ற மட்டக்குதிரையொன்றை சிறுத்தை கடித்து கொன்றுள்ளது சம்பவம் பதிவாகியது.

தற்போது மலையக வனப் பிரதேசப் பகுதியில் சிறுத்தையின் நடமாட்டம் கடந்த சில மாதங்களாக அதிகரித்துள்ளதாகவும் பிரதேச மக்கள் அச்சம் தெரிவிக்கின்றன.

எனவே, இந்த பிரச்னையின் தீவிரத்தை உணர்ந்து கால்நடை வளர்ப்போருக்கு உரிய விழிப்புணர்வை ஏற்படுத்தி , அதையும் மீறி நடக்கும்பட்சத்தில் கால்நடைகளை பறிமுதல் செய்து, கால்நடை வளர்ப்போருக்கு கடும் அபராதம் விதித்து கால்நடையை



### மாநகர சபையின் கவனத்திற்கு இது...

ஒப்படைக்கவேண்டும் என பொது மக்களும், வாகன சாரதிகளும் கேட்டுக்கொள்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக பல முறை நகரசபைக்கு தெரிவித்தபோதிலும் இதனை நகரசபை கவனத்திற்கொள்ளாமல் இருப்பதாக வாகன சாரதிகள் தெறிவிக்கின்றனர்.

நுவரெலியா நகரசபை, நகரசபை உறுப்பினர்களே இது உங்கள் கவனத்திற்கு...

# நிலாவெளி கடற்கரையில் அகப்பட்ட யுவதிகள் படையினரால் மீட்பு!



(எப்.முபாரக்)

நிலாவெளி கடற்கரையில் நீராடச் சென்ற வேளை கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்ட இரண்டு யுவதிகள் பொலிஸ் உயிர்காப்புப் பிரிவு மற்றும் கடற்படையின் கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரால் மீட்கப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (12) இடம்பெற்றுள்ளது.

குடும்பத்தாரோடு சுற்றுலா வந்த அனுராதபுரம் சியம்பலகஹாகம பிரதேசத்தைச் சேர்ந்த இந்த யுவதிகளே கடலில் நீராடும் போது அலையில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

சுமார் 150 மீற்றர் தூரம் அலையில் இழுத்துச் செல்லப்பட்ட இவர்கள் இருவரையும் பொலிசாரும் கடற்படையின் கரையோரப் பாதுகாப்பு பிரிவினரும் கரைக்குக் கொண்டு வந்து முதலுதவி அளித்து குடும்ப உறுப்பினர்களிடம் ஒப்படைத்துள்ளதாக கரையோர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# கிறீன்ட் பீல்ட் நீரோடை பாதுகாப்பு அணையினை சீர் செய்யுமாறு பொது மக்கள் கோரிக்கை!

(எம்.என்.எம்.அப்ராஸ்)

கல்முனை கிறீன்ட் பீல்ட் குடியிருப்பு பகுதியை அண்மித்து காணப்படும் நீரோடையின் பாதுகாப்பு அணை மிகவும் மோசமான நிலையில் உடைந்து காணப்படுகின்றமையினால் இதனை உடனடியாக சீர் செய்யுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குறித்த நீரோடைக்கு அருகிலுள்ள பாதுகாப்பு அணை உடைந்து காணப்படுவதனால் நீர் சென்று மண்ணரிப்பு ஏற்பட்டுள்ளதுடன் நிலப்பகுதி தாழ் இறங்கி காணப்படுவதுடன் அருகிலுள்ள வீதிக்கும் பாதிப்பு ஏற்ப்படும் நிலையை அவதானிக்க முடிகின்றது.


சுமார் 400க்கு மேற்ப்பட்ட குடும்பங்கள், கல்முனை கிறீன்ட் பீல்ட் குடியிருப்பு பகுதியில் வசித்து வருவதுடன் அரச காரியாலயத்திற்க்கு வேலைக்கு செல்வோர்,பாடசாலை மாணவர்கள்,விவசாயிகள் பொது மக்கள் என பலரும் நாளாந்தம் குறித்த நீரோடைக்கு அருகில் உள்ள வீதியை பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது

பாதுகாப்பு அணை மற்றும் வீதி என்பன மேலும் சேதமடையும் வாய்ப்பு உள்ளது

இது தொடர்பில் கல்முனை பிரதேச அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சாய்ந்தமருதில் தொற்றா நோய் தடுப்புக்கான கேந்திர நிலையம்





(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் (12) வெள்ளிக்கிழமை கல்முனை சுகாதார பிராந்திய தொற்றா நோய்த்தடுப்புக்கான கேந்திர நிலையம் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.ஆர்.எம். தௌபீக் மற்றும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் ஆகியோர்களின் பங்குபற்றுதலுடன் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.ஏ வாஜித் திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.சீ.எம். மாஹிர் உள்ளிட்ட பிரிவுத்தலைவர்களும் சுகாதார உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டலுக்கமைவாக சாய்ந்தமருது பிரதேச வைத்திய அதிகாரி எம்.எச்.கே. சனூஸ் அவர்களினால் இந்நிலையத்தின் பணிகள் கடந்த இரண்டு மாதங்களாக முன்னெடுக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இன்று திறந்து வைக்கப்பட்ட இந்நிலையத்தின் செயற்பாடுகள் எதிர்காலத்தில் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளதுடன் இதற்கான விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் நிகழ்வில் கலந்து கொண்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

மேலும் இந்நிகழ்வில் கண் பரிசோதனைக்கான உபகரணங்களும் குளிரூட்டியும் ஒலிக்கருவிகளும் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# படுகொலைகள் தந்த துயரங்கள்



ஏ.எச்.ஏ. ஹுசைன்

1990ம் ஆண்டு என்பது இலங்கையில் இனப்படுகொலைகளுக்கும் இனச்சுத்திகரிப்புக்கும் அகதி வாழ்க்கைக்கும் பெயர் போன இருண்ட காலகட்டமாக இன்றளவும் பார்க்கப்படுகின்றது.

இனப்படுகொலைகள் நடந்து இப்பொழுது 32 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் அந்தத் துயரங்கள் ஏற்படுத்திய இதயக் காயங்கள் இன்னமும் மாறாமல் மறையாமல் நெஞ்சை நெருடுகின்றது.

ஒரு கால கட்டத்தில், நினைவு தினங்கள் வரும்போதே பயங்கரங்கள் நடுங்க வைக்கும் சூழ் நிலை காணப்பட்டது. ஆனால் தற்போதைக்கு அவ்வாறான பயங்கரம் இல்லை என்பது ஆறுதலளிக்கும் விடயம்.

மட்டக்களப்பு - கொழும்பு நெடுஞ்சாலையில் மட்டக்களப்பு நகரிலிருந்து வடக்கே பயணிக்கும்போது சுமார் 12 கிலோமீற்றர் தொலைதூரத்தில் அமைந்திருக்கிறது ஏறாவூர் நகரம்.

இந்த ஊர் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்களுடன் சுமார் 50 ஆயிரம் சனத்தொகையை தன்னகத்தே கொண்டுள்ளது.

ஏற்கெனவே ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலகப் பிரிவுடன் ஏறாவூர் நகரிலுள்ள மக்களின் அரச நிருவாகக் கடமைகள் இடம்பெற்று வந்துள்ளபோதிலும் நகருக்கென தனியான பிரதேச செயலகம் அமைக்கப்பட்டது.

ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலகப் பிரிவிலமைந்துள்ள மட்டக்களப்பு - பதுளை வீதியை அண்டியுள்ள பகுதிகளிலேயே வாழ்வாதாரத்துக்கான பூர்வீகக் கிராமங்களும் உள்ளன.

ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள், சேனைப் பயிர்த் தோட்டங்கள், பல்லாயிரக்கணக்கான கால்நடைகள், நன்நீர் மீன்பிடி உள்ளிட்ட பல்வேறு வாழ்வாதாரத் துறைகளில் அவர்கள் ஈடுபட்டு வந்தனர்.

1985 ஏப்ரலுக்குப் பின்னரான காலப்பகுதியில் அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த முஸ்லிம்களில் பலர் அவ்வப்போது ஆயுததாரிகளால் படுகொலை செய்யப்பட்டனர்.

கிராமங்களில் வாழ்ந்த அத்தனை முஸ்லிம்களும் இனச்சுத்திகரிப்புச் செய்து விரட்டியடிக்கப்பட்டதனால் அவர்கள் முஸ்லிம் நகரங்களில் ஒன்றான ஏறாவூரிலும் இனச்சுத்திகரிப்புச் செய்து அவர்களை அங்கிருந்து விரட்டியடிக்கும் நோக்கில் முஸ்லிம்கள் மீது கூட்டுப் படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டது.

1990ஆம் ஆண்டு ஒகஸ்ட் 11ஆம் திகதி இரவு 9 மணியளவில் ஏறாவூருக்குள் புகுந்த ஆயுததாரிகள் கர்ப்பிணியின் வயிற்றைக் கீறிக்கிழித்து சிசுவை வெளியே எடுத்து அம்மியில் வைத்து அடித்துக் கொன்றதாக சம்பவத்தில் பாதிக்கப்பட்டு தற்போதும் உயிர்வாழ்ந்துகொண்டிருக்கும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏறாவூரில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், நிறைமாதக் கர்ப்பிணிகள் என வயது வரம்பு வித்தியாசமின்றி 121 பேர் சுட்டும், வெட்டியும், குத்தியும், எரித்தும் கொல்லப்பட்டிருந்தனர்.

இருநூறிற்கும் மேற்பட்டோர் காயங்களுக்குள்ளானார்கள்.



ஆணைக்குழு குறிப்பான சிபார்சுகளைச் செய்துள்ளது.

வெளியேற்றப்பட்டவர்களாகிய முஸ்லிம்களுடைய பிரச்சினைகள் முரண்பாட்டின் பின்னர் நல்லிணக்கம் காண்பதில் பெரும் சிக்கல் வாய்ந்தனவாயுள்ளதாக ஆணைக்குழு அவதானித்துள்ளது.

வட மாகாணத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் நன்கு ஒழுங்குபடுத்தி முன்கூட்டியே திட்டமிடப்பட்ட முறையில் இனச்சுத்திகரிப்புச் செய்து வெளியேற்றப்பட்டுள்ளனர். (அறிக்கை 5.137)

இலங்கையின் முரண்பாடுபற்றிய வரலாற்று ஆவணங்களில் முஸ்லிம்கள் தமது பூர்வீக இடங்களிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டதுபற்றி சரியான முறையில் எழுதப்படவில்லையென முஸ்லிம்கள் உணருகின்றனர்.

எல்.ரீ.ரீ.ஈ. இனரால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்புச் செய்திகளை இலங்கை அரசாங்கம் போதியளவு அங்கீகரிக்கவில்லை எனவும் முஸ்லிம்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

உதாரணமாக வடபகுதியில் வாழ்ந்து வந்த முஸ்லிம்களை அவர்களது வாழ்விடங்களிலிருந்து நன்கு திட்டமிடப்பட்ட முறையில் இனச்சுத்திகரிப்புச் செய்து பலவந்தமாக வெளியேற்றியமை தொடர்பில் ஒரு ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்து விசாரணை செய்யுமாறு முஸ்லிம்களால் விடுக்கப்பட்ட கோரிக்கை இன்றுவரை நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழுவின் அறிக்கைக்கான ஒரு வழிகாட்டி நூல் ஜூன் 2013)

ஏறாவூரில் ஓரிரவில் படுகொலை செய்யப்பட்ட 121 தியாகிகளின் 32வது நினைவு நிகழ்வை அனுஷ்டிக்கும் முகமாக காட்டுப்பள்ளி வாசலில் அடக்கஸ்தல வளாகம் இம்முறை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு நினைவுக் கற்களும் நாட்டப்பட்டன.

தியாகிகள் ஞாபகார்த்தப் பேரவையின் ஸ்தாபகத் தலைவர் எம்.எல். அப்துல் லத்தீப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுகளில் ஊர்ப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

கறைபடிந்த வரலாறாகியுள்ள தியாகிகள் தினத்தை வருடாந்தம் அனுஷ்டிப்பதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களின் மனவடுக்களைக் குணப்படுத்துவதும் அவர்களது நலனோம்பு விடயங்களை முன்னெடுப்பதும் இன்னபிற சமூகநல செயற்பாடுகளின் மூலம் இன ஐக்கியத்தை வளர்ப்பதும் நோக்கமாகும் என தியாகிகள் ஞாபகார்த்தப் பேரவையின் தலைவர் லத்தீப் தெரிவித்தார்.

32 வருடங்கள் கடந்தாலும் காத்தான்குடி பள்ளிவாசல் சுவர்களில் முஸ்லிம்களைக் கொன்றொழித்த துப்பாக்கி துளைத்த ஓட்டைகள் மாறாத வடுக்களாக இன்னமும் காணப்படுகின்றன. அதேபோல ஏறாவூரில் தியாகிகள் பூங்கா யுத்த கால வன்முறை அநீதிகளின் அத்தாட்சியாக இன்றும் விளங்குகின்றன.

1990 ஒகஸ்ட் 03ஆம் திகதி காத்தான்குடி மீரா பெரிய ஜும்மா பள்ளிவாயல் மற்றும் ஹுஸைனியா பள்ளிவாயலில் இரவு நேர இஷாத் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் மீது எல்ரீரீஈ இனர் துப்பாக்கிச் சூடு நடத்தி முதியவர்கள், சிறுவர்கள் உட்பட 103 பேரைக் கொலை செய்தனர். அந்தத் தாக்குதலில் 140க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர்.



1990ஆம் ஆண்டு இடம்பெற்ற இன வன்முறைகளையும் முஸ்லிம்கள் மீதான கூட்டுப் படுகொலைகளையும் தொடர்ந்து ஏறாவூர் பகுதி திறந்தவெளி அகதி முகாம்போலவும் அங்கிருந்து வெளியில் நகரமுடியாத உயிரச்சுறுத்தல் இருந்ததாலும் ஏறாவூர் நகர மக்கள் அரச நிருவாகக் கடமைகளுக்காக



பிரதேச செயலகம் அமைந்திருந்த ஏறாவூரிலிருந்து சுமார் ஒரு கிலோமீற்றருக்கும் குறைவாகவுள்ள செங்கலடிக்குச் செல்ல முடியாமற் போனதாக பிரதேச முஸ்லிம்கள் தெரிவிக்கின்றனர்.

ஆயுதம் ஏந்திய, உரிமைப் போராட்டம் என்று கூறிக் கொண்ட அமைப்பினரால் 1990ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கூட்டு இனப்படுகொலையின் பின்னர் ஏறாவூர் மக்கள் தமது நிருவாக ரீதியான கருமங்களுக்காக ஊரை விட்டு வெளியேறமுடியாத நிலைமை ஏற்பட்டபொழுது ஏறாவூர் அருகிலுள்ள ஏறாவூரிலும் அயல் மாவட்டங்களான பொலொன்னறுவை அம்பாறை மாவட்டங்களின் முஸ்லிம் பகுதிகளுக்கும் இடம்பெயரலாயினர்.

இவ்வாறிருக்கும் தறுவாயிலேயே முன்னதாக 1990ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஏறாவூர் நகரில் அமைந்திருந்த பொலிஸ் நிலையம் எல்ரீரீஈ இனரால் சுற்றிவளைக்கப்பட்டு தாக்கப்பட்டது.

அங்கிருந்த பொலிஸாரின் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. கடமையிலிருந்த தமிழ் பொலிஸாரை விடுவித்த எல்ரீரீஈ இனர், ஏனைய முஸ்லிம் சிங்களப் பொலிஸாரை தம்வசம் அழைத்துச் சென்று படுகொலை செய்திருந்தனர். பொலிஸ் நிலையத்தையும் தாக்கி அழித்துவிட்டே அவர்கள் சென்றிருந்தனர்.

எனவே, ஏறாவூர் முஸ்லிம் நகரம் பாதுகாப்பு எதுவுமற்ற நகரமாக இருந்தது.

இவ்வாறிருக்கும் தறுவாயிலேயே மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான படுகாயமடைந்தவர்களில் பலர் பின்னாட்களில் சிகிச்சை பயனின்றி மரணத்தைத் தழுவியதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

கற்றுக் கொண்ட பாடங்களுக்கும் நல்லிணக்கத்திற்குமான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் கடந்த 30 வருட கால ஆயுத வன்முறைகளில் இலங்கை முஸ்லிம் சமூகம் எதிர்கொண்ட இடர்கள்பற்றி விவரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை தேசிய சமாதானப் பேரவை அதன் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில்,

“இலங்கை முஸ்லிம் சமூகத்தின் மீது ஏற்படும் பாதிப்புக்கள் இரு வகையினதாகும். முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மைத் தமிழர்கள் மத்தியில் சிறுபான்மையினராக இருக்கின்ற அதேவேளை சிங்கள பெரும்பான்மையினர் மத்தியிலும் சிறுபான்மையினராகவே இருக்கின்றனர்.

இதனால், தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையிலான முரண்பாடுகளுக்கிடையில் அகப்பட்டு சிக்கிக் கொள்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் முஸ்லிம் சமூகத்தின்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகள்பற்றி கற்றுக் கொண்ட பாடங்களுக்கும் நல்லிணக்கத்திற்குமான ஜனாதிபதி ஆணைக்குழுவுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழீழப் புலிகள் துப்பாக்கி முனையில் மேற்கொண்ட இன அழிப்பு நடவடிக்கையால் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டமை தொடர்பான தகவல்கள் ஆணைக்குழுவின் முன்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. (ஆணைக்குழு அறிக்கை 8.167) தொடர்ந்து செல்லும் முஸ்லிம் சமூகத்தின் மனக்குறைகள் தொடர்பாக ஆவன செய்வதுபற்றி நிறைவேற்றப்படவில்லை.

ஒவ்வொருவருக்கும் தமது பரம்பரை வாழ்விடங்களில் சென்று மீளக்குடியேறுவதற்கான இடம்பெயர் சுதந்திரம் சர்வதேச ரீதியான சட்டங்களின் தத்துவங்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக இருக்கின்றபோதும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட நிலையில் தமது பூர்வீகப் பகுதிகளை விட்டுப் பிரிந்து வேறு பகுதிகளில் வாழ்ந்து வரும் முஸ்லிம்கள் அவர்களது பாரம்பரிய இடங்களுக்குத் திரும்பிச் செல்வதற்கு அரசாங்கம் ஒழுங்கு முறையான எந்தத் திட்டங்களையும் மேற்கொள்ளாததால் தற்துணிவில் மீளக் குடியேறும் ஒரு சில முஸ்லிம்களும் பல இடையூறுகளைச் சந்தித்து வருகின்றனர்.

இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்துதல் தொடர்பிலான அரசின் கொள்கையில் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை மீளக் குடியமர்த்துதல் தொடர்பில் அவர்களுக்கு உதவுதல்பற்றிய எந்தவொரு ஏற்பாடுகளும் இல்லை.

பலவந்தமாக வெளியேற்றப்பட்ட நிலையில் இடம்பெயர்ந்து வாழும் முஸ்லிம்களுக்காக அவர்களுடனும் அவர்கள் இடம்பெயர்ந்தபின் அங்கு வந்து வாழும் சமூகத்தாருடனும் கலந்தாலோசித்து நீடித்து நிலைக்கக் கூடியதான ஒரு தீர்வினையும் அதற்கான அரச கொள்கைகளையும்பற்றிப் பரிசீலிப்பதற்காக ஒரு சிறப்புக் குழு நியமிக்கப்பட வேண்டும்.

வெளியேற்றப்பட்டு இன்றுவரை தமது பூர்வீகப் பாரம்பரிய இடங்களை பறிகொடுத்துவிட்டு பரிதவித்திருக்கும் முஸ்லிம்கள் தொடர்பாக ஒரு சீரான அரச கொள்கை தேவை”

என்று தேசிய சமாதானப் பேரவையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தேசிய சமாதானப் பேரவையின் கற்றுக் கொண்ட பாடங்களுக்கும்

2006ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 2ம் திகதி இரவு மூதூர் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் முஸ்லிம்களை வெளியேறுமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவித்து விட்டு எறிகணை வீச்சு நடத்தி 54 முஸ்லிம்களைப் படுகொலை செய்தனர் என்று உள்ளூர் மக்கள் கூறுகின்றார்கள்.

எந்தவகையிலும் மனிதர்களுக்கும் இயற்கைக்கும் கேடு விளைவிக்கும் பயங்கரவாதம் தோன்ற இனியொருவரும் இடமளித்துவிடக் கூடாது என்பதை பாதிக்கப்பட்ட மக்கள் தமது பிரார்த்தனையாக முன்வைக்கின்றார்கள்.

மனிதத்தை இருத்தி மகிழ்சியைத் தரிசிக்க மனித மனம் கொண்டோருக்கு வரவேற்பளிப்போம் வாருங்கள். என்று அறைகூவல் விடுக்கின்றார் கவிஞரும் ஐக்கிய சமாதான சகவாழ்வு சமூகத்தை விரும்பும் ஆர்வலருமான எழுத்தாளர் முகில்வாணன் ராசப்பா அவர்கள்.

அரசியல் வாதிகளின் நடிப்பிலும் ஆயுததாரிகளின் அதிகாரத்திலும், மத வியாபாரிகளின் விளம்பரங்களிலும் மயங்கி, மானிட நேசத்தைச் சிதைத்தவர்களே! உடைந்து போன உறவு மடிந்து போகும் முன்பே ஒட்டி எடுப்போம் வாருங்கள்! அறுந்து போன அன்பு இறந்து போகும் முன்பே முடிச்சுப் போடுவோம் வாருங்கள்.

இனவாத, இயக்கவாத, மதவாதப் பேய்கள் மனிதரை வருத்தி, போரை நடத்தி சுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தன. அந்தக் கொடுமைகள் இனியும் தொடராமல் இருக்க ஒன்றாய் உழைப்போம் வாருங்கள்! என்ற அவரது அறைகூவல் ஆதங்கமாய் அமைந்துள்ளது.

அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

## மனநலமும் ஆலோசனையும்

# பொருளாதார நெருக்கடிகளின்போது மனநலம்



மனநலம் என்பது பொது சுகாதாரத்தின் ஒரு பிரிக்க முடியாத பகுதி என்பதை நாம் அறிவோம்.

எமது அறிவாற்றல் வளரவும், அழகான சிந்தனை உருவாகவும் உணர்ச்சியை நெகிழ்வு படுத்தவும் அமைதியாக வாழவும் மன ஆரோக்கியம் மிகவும் அவசியமாகும்.
சமூக திறன்கள் வளர்க்கவும் அன்றாடம் முகம் கொடுக்கும் மன அழுத்தங்களை எதிர்கொள்வதற்கான அடிப்படை கூற்றாகும் மனநலம் இருக்கிறது.
இந்த மனநலம் எமது ஆரோக்கியமான செயல்பாட்டிற்கு பெரிதும் கைகொடுக்கிறது.
மன ஆரோக்கியம் தனிமனித வளர்ச்சியில் அடிப்படையாக இருப்பது போன்று ஒரு நாட்டின் பொருளாதார விருத்தியின் மிக முக்கிய செல்வாக்கு செலுத்தும் காரணியாகவும் இருக்கிறது.
மக்கள் மன ஆரோக்கியம் உள்ளவர்களாக இருந்தால் மட்டுமே அந்த நாட்டின் உற்பத்தித்திறனை மேம்படுத்தவும் நிலைநிறுத்துவும் முடியுமாக இருக்கும்.
மக்களின் மன ஆரோக்கியம் பொருளாதார உற்பத்திக்கு, பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமானதாக அமைகிறது.
ஒரு நாட்டின் பொருளாதாரம் எவ்வளவு ஆரோக்கியமாக இருக்குமோ அந்த நாட்டு மக்களின் வாழ்க்கை அதற்கு ஏற்ப ஆரோக்கியமாக இருக்கும்.
பலத்த பொருளாதார நெருக்கடிகளை ஒரு நாடு தொடர்ந்து சந்திக்கும் போது அது பொதுமக்களின் அன்றாட வாழ்வில் படிப்படியாக சீர்குலைவை ஏற்படுத்தி அன்றாட வரவு செலவு, போக்குவரத்து, கல்வி, சுகாதாரம் போன்ற பல அமைப்புகளைப் பயங்கரமாக பாதிக்கச் செய்துவிடலாம்.
ஒரு நாட்டின் பொருளாதார மந்தநிலை ஏற்படும் போது தனிப்பட்ட கஷ்டங்களை அனுபவிப்பவர்கள் வருமானம், வேலை, எதிர்காலம் தொடர்பான அதிகப்படியான கவலைகளால் தாக்கப்பட்டு மனச்சோர்வு மற்றும் சிக்கலான சிந்தனை பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவும் நேரிடலாம்.
இது போன்ற சந்தர்ப்பங்களில் மக்கள் தமது சொந்த உணர்வுகளுக்கு செவிமடுப்பதை நிறுத்திவிட்டு அடுத்து எவ்வாறான பொருளாதார அதிர்ச்சிகள் வரும் என்பதற்கும் மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை பார்க்கவுமே கூடுதல் கவனம் செலுத்தலாம்.
அதேபோன்று அவர்கள் தங்கள் திறமைகள் மற்றும் ஆசைகளைப் பற்றி நினைப்பதை விட விலையேற்றத்தின், பணவீக்கத்தின் அடுத்த செய்தியைப் பற்றி அறிவதில் அவதானம் செலுத்துபவர்களாகவும் ஆகலாம்.
அதனால் பொருளாதார நெருக்கடி மன ஆரோக்கியத்தை நிர்ணயிக்கும் காரணிகளை பாதிக்கச் செய்யலாம்.
மக்களின் ஆரோக்கிய காரணிகள் பலவீனமடைந்து ஆபத்திற்கான காரணிகள் பலப்படுத்தப்படலாம் என்பதே இதில் கவனிக்க வேண்டிய முக்கிய விடயமாகும்.
ஏதோ காரணங்களால் ஒரு நாட்டில் ஏற்படும் பொருளாதார நெருக்கடிகள் அந்த நாட்டு மக்களின் மனங்களை கடுமையாக உரசிப் பார்த்தாலும் இது சாதாரணமானது தவிர்க்க முடியாதது.
பொருளாதார நெருக்கடிகள் எம்மை எமது இயக்கத்தை ஸ்தம்பிதமடையச் செய்தாலும் உலகம் இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது என்பதை நாம் புரியவேண்டும்.
நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு முதலில் நெருக்கடி நிலையை ஏற்றுக் கொள்ளவும் மனதைரியத்துடன் அதற்கு முகம் கொடுக்கவும் வேண்டும்.
நாம் நாட்டையும் அரசையும் திட்டித் தீர்ப்பதும் கவலைப்பட்டு கருகிக்கொண்டருப்பதும்இதற்கான தீர்வாகாது.
நாம் எப்போதும் புலங்கிக் கொண்டிருப்பதால் நாம் எமது மன நலத்தையும் செயற்திறனையும் இலகுவாக இழந்து விடுவோம்.
இது போன்ற பாரமான சவால்களை சந்திப்பதன் மூலம் எம்மை எமது மனநிலையை பாதுகாத்து நாட்டின் விழுந்து இருக்கும் பொருளாதாரத்தை மிக விரைவாக கட்டி எழுப்ப துணை புரியலாம்.

***

# ஜனாதிபதியுடனான கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கையளித்த ஆவணம்!





ஜனாதிபதி அவர்களுக்கு,

பொருளாதார மற்றும் சமூக ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த தேசிய சர்வ கட்சிச் செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்

ஜூலை 29, 2022 திகதியிட்ட உங்கள் கடிதம் தொடர்பில், மேற்கூறிய விடயத்தைப் பற்றிய விரிவான உரையாடலைத் தொடங்குவதற்கான உங்கள் முயற்சிகளை வரவேற்கிறோம். அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை மீண்டும் அறிமுகப்படுத்துவதையும், மேற்கூறிய நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் பாராளுமன்ற மேற்பார்வைக் குழுக்களை மீண்டும் செயற்படுத்தி அவற்றை வலுவூட்டுவதற்கான முன்மொழிவையும் நாங்கள் மதிக்கின்றோம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடம் பின்வரும் விடயங்களை உங்கள் முன் வைக்க விரும்புகிறது. இவற்றிற்கு தங்களிடமிருந்து சாதகமான பதிலை நாங்கள் எதிர்பார்க்கின்றோம், மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டிய விடயங்களில் நாங்கள் எவ்வாறு ஒத்துழைக்கலாம் என்பது பற்றிக் கலந்துரையாடுவதற்கான சாதகமான சூழலையும் அதுஉருவாக்கும்.

அவசரகால நிலைமையை நீக்கி, அமைதியான போராட்டக்காரர்களையும் , அவர்களின் தலைவர்களையும் குறிவைத்து கைது செய்வதையும் துன்புறுத்துவதையும் நிறுத்திக் கொள்ள வேண்டும். இந்தக் கைதுகளில் பல தேவையற்றவை. அவை இயல்பு வாழ்க்கையைப் பேணுவதற்கு பாதகமானவையாகவும், ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவை அமர்வுகளில் அரசாங்கத்திற்கு மேலும் சங்கடத்தை ஏற்படுத்துவனவாகவும் அமைந்துவிடும். இவ்வாறான கைதுகளில் பல நாட்டில் சட்டத்தின் ஆட்சியை முறையாக அமுல்படுத்துவது குறித்துக் கவலைகளைத் தோற்றுவித்துள்ளன என்பதும்,அவை முதலீடுகளை ஊக்குவித்தல் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வருகை போன்றவற்றைப் பாதிக்கும் வகையிலும் அமைந்துவிடலாம் என்பதும் எங்களது கரிசனையாகும்.

பாராளுமன்றத்தில் சம்பிரதாய அமர்வின் போது தாங்கள் வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம் தாராளவாதம், சகிப்புத்தன்மை மற்றும் மதச்சார்பற்ற தேசத்தின் நோக்கத்தை அடையப்பெறுவது என்பன அவசியமாகும்.

”ஒரே நாடு, ஒரே சட்டம் ” என்ற தொனிப்பொருளின் கீழ் முன்னாள் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட தீவிரவாத மதகுரு ஒருவரின் தலைமையிலான ஆணைக்குழு, அவரிடம் காணப்பட்ட மதவெறி மற்றும் தப்பெண்ணத்திற்குப் பெயர் பெற்றது.அதன்

பரிந்துரைகள் மூலம் சிறுபான்மைச் சமூகங்களின் விகிதாசாரத்தில் குறிவைக்கப்பட்டுள்ளது.அவர்களின் நடைமுறைகள், சமய நம்பிக்கைள் மற்றும் தனிப்பட்ட சட்டங்களிலான சீர்திருத்தங்கள் என்பன பற்றி அதில் விதந்துரைக்கப்பட்டவை அதிகம் ஊறு விளைவிப்பனவாகும்.அவற்றின் காரணமாக குறிப்பாக முஸ்லிம்கள் மத்தியில் அதிர்ச்சியும்,அதிருப்தியும் நிலவுகின்றன.

அதேபோன்றதுதான் கிழக்கு மாகாணத்தில் உள்ள தொல்பொருள் இடங்களைப் பாதுகாப்பதற்காக எனக் குறிப்பிட்டு அமைக்கப்பட்ட மற்றொரு ஆணைக்குழுவின் நியமனமுமாகும்.அதனூடாக,

எந்தவொரு சிறுபான்மை சமூகத்தினரினதும் பிரதிநிதித்துவம் இல்லாமல், கிழக்கு மாகாணத்தில் உள்ள தொல்பொருள் இடங்கள் அந்த மாகாணங்களில் வசிக்கும் மக்களால் அழிக்கப்படும் அல்லது சட்டவிரோதமாக அபகரிக்கப்படும் அபாயத்தில் உள்ளன என்றவாறான தோற்றப்பாட்டை ஏற்படுத்துவது மற்றொரு பயனற்ற செயலாகப் பார்க்கப்படுகிறது.இது முஸ்லிம் மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் அதிக மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது. தொல்பொருள் திணைக்களம் உட்பட பல்வேறு அரசாங்க நிறுவனங்கள் சட்டத்தை மீறுவதை உறுதி செய்வதற்கு கடுமையான சட்டங்களைக் கொண்டிருக்கின்றன. இதனை கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் முஸ்லிம்களும் தமிழர்களும் முன்னைய நிருவாகத்தினால் திட்டமிட்டு சமூகங்களை துருவப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியாகவே கருதுகின்றனர். இந்த ஆணைக்குழுவின் நியமனம் மற்றும் அது ஏற்படுத்தியுள்ள அச்சங்களையும், கவலைகளையும் போக்குவதற்கு தாங்கள் உரிய நடவடிக்கைகளை எடுப்பீர்கள் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணை மற்றும் அவை தொடர்பில் சில வழக்குகள் தொடரப்பட்ட விதம் என்பன கவனத்தில் கொள்ளத்தக்கன. பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டிய அதேவேளையில், கறைபடியாத சேவைப் பதிவுகளைக் கொண்ட காவல் துறையின் முன்னாள் உயர் அதிகாரிகள் உட்பட அப்பாவி மக்கள் மீது தேவையற்ற வஞ்சத்துடன் முறைகேடாக நடவடிக்கை எடுக்கப்படுவதை நோக்கமாகக் கொண்டு நடத்தப்பட்ட விசாரணைகளை முறையாக மதிப்பாய்வு செய்ய முயற்சி எடுப்பீர்கள் எனவும் எதிர்பார்க்கிறோம். தவறாகக் கையாளப்பட்ட விசாரணைகள் மற்றும் ஆதாரங்களை மறைப்பதற்கு அல்லது திசைதிருப்புவதற்கு வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் என்பவற்றுடன், மற்றும் சில சம்பவங்களை முறையாக விசாரிக்கத் தவறிய காரணிகளை கர்தினால் மெல்கம் ரஞ்சித் உட்பட மற்றும் பலர் தெரிவித்துள்ள கருத்துக்கள் நன்றாக வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸனரான நாங்கள் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை மற்றும் பாராளுமன்றத் தெரிவுக்குழு ஆகியவற்றின் முன்னிலையில் வைக்கப்பட்ட சாட்சியங்கள் போன்றவற்றை முழுமையாக ஆராய்ந்துள்ளதுடன், சில தடயங்கள் ஏன் சரியாக ஆராயப்படவில்லை என்பதை தெளிவுபடுத்துவதற்காக எமது கவலைகளைப் புலனாய்வாளர்களுடன் பகிர்ந்து கொள்ளத் தயாராக உள்ளோம்

ஒத்திவைக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் முன்பு இருந்த அதே விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் நடத்தப்பட வேண்டும்.

இந்த வாரத்தில் அறிவிக்கப்பட்ட சில உள்ளூராட்சி மன்றங்களின் தரமுயர்த்தலை வரவேற்கும் அதேவேளையில்,மூதூர் பிரதேச சபை, கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபை மற்றும் சம்மாந்துறை பிரதேச சபை ஆகியன நகர சபைகளாக தரமுயர்த்தப்பட வேண்டுமென வலியுறுத்துகிறோம். கோறளைப்பற்று மத்திய பிரதேச செயலகப் பிரிவு தொடர்பில் பன்னம்பலம ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரையானது தோப்பூர் பிரதேச பிரதேச சபையையும் உருவாக்குவதுடன் தாமதமின்றி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். கல்முனை முஸ்லிம் பிரிவு மற்றும் கல்முனை தமிழ்ப் பிரிவு சர்ச்சையானது அங்கீகரிக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்து , இரு சமூகத்தினரின் கரிசனைகளையும் கருத்தில் கொண்டு கிராம சேவகர் பிரிவுகளின் முறையான மீள் எல்லை நிர்ணயத்தின் பின்னர் தீர்க்கப்பட வேண்டும்.

அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் ஏனைய முக்கிய சிவில் சேவை பதவிகள் போன்ற நியமனங்களில் சிறுபான்மையினர் புறக்கணிக்கப்பட்டுவருவது கவலைக்குரியது. இந்த முரண்பாட்டைச் சரிசெய்யுமாறு தங்களை நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

வடக்கு மற்றும் கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளிலிருந்தும், ஆக்கிரமிக்கப்பட்ட,பயிரிடப்பட்ட நிலங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட, பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான விவசாயிகளின் மனுக்களை ஆய்வு செய்து நியாயத்தை நிலைநாட்ட ஒரு குழுவை அமையுங்கள்.

2005 ஆம் ஆண்டுக்குப் பிறகு வெளியிடப்பட்ட வர்த்தமானிகள் மற்றும் சுற்றறிக்கைகளின் அடிப்படையில் ,வன வள மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களங்களால் தொடங்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக, அந்த நிலங்கள் பல ஆண்டுகளாக அவர்களுக்குச் சொந்தமானவையாக அல்லது மாவட்ட காணி அலுவலரின் செல்லுபடியான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள நிலையில் பயிரிடப்பட்டனவாக இருக்கத்தக்கனவாக உண்மை தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது கவலைக்குரியது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பாரிய உணவுப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய அனைத்து நிலப் பரப்புகளிலும் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் தங்கள் முயற்சிக்கும் அது பெரிதும் உதவும்.



கி.ஷனுஸ்காந்









மீன்பாடும் தேனாடாகிய மட்டக்களப்பு மாநகர் கல்லடியில் சுவாமி விபுலாநந்தர் அவர்களின் நினைவாக நிறுவப்பட்டிருக்கும்



## சுவாமி விபுலாநந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தில்

# நடிகர் நாசருடனான கதையாடல் நிகழ்வு

கிழக்கு பல்கலைக்கழகம் சுவாமி விபுலாநந்தர் அழகியல் கற்கைகள் நிறுவகத்திற்கு தென்னிந்திய பிரபல நடிகர் நாசர் 07 ஆம் திகதியன்று மிகவும் விமர்சையாக நாசருடனான கதையாடல் எனும் தொனிப்பொருளில் நடைபெற்றது இதன்போதுநிறுவகத்தின் பணிப்பாளர், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழகமாணவர்கள், பல்கலைக்கழக ஊழியர்கள் மற்றும் சமூக நலன்விரும்பிகள் கலந்து கொண்டார்கள்.

இதன்முதல் நிகழ்வாக முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் அவர்களின் உருவச்சிலைக்கு தென்னிந்திய பிரபல நடிகர் நாசரினால் பூமாலை அணிவிக்கப்பட்டு மங்களவிளக்கேற்றல், இசைத்துறை விரிவுரையாளர்களால் விபுலாநந்தர் கீதம் இசைக்கப்பட்டு,தலைமையுரை மற்றும் வரவேற்புரை சுவாமி விபுலாநந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி Dr. Florence Bharathy Kennedy இனால் நிகழ்த்தப்பட்டதோடு,நாசருடனான கதையாடல் நிகழ்வை இணைப்பாக்கம் செய்து வழங்கிய கலாநிதி திரு த.நிவானந்தராசா அவர்களின் உரை இடம்பெற்றது.

அடுத்த நிகழ்வாக தென்னிந்திய பிரபல நடிகர் நாசரின் உரை இடம்பெற்றது இதன் போது அவர் உரையாற்றுகையில் நீங்கள் பேசுகின்ற தமிழ் என் காதில் பாடல் போல் ஒலிக்கிறது உங்களை பேசவிட்டு நான் கேட்டுக்கொள்கின்றேன் என இலங்கைத் தமிழர்களின் மொழிப் புலமையை தென்னிந்திய திரைப்பட நடிகர் நாசர் புகழ்ந்து பேசியதோடு,

நிகழ்வின் முக்கிய அம்சமான நாசருடனான கதையாடல் நிகழ்வு கலாநிதி சு.சிவரெட்ணம், கலாநிதி திருமோகனதாஸ், விரிவுரையாளர் திருச்செந்தூரன் ஆகியோரின் தலைமையில் ஆரம்பமாகியது.

இதன் போது சுவாமி விபுலாநந்தர் அழகியல் கற்கைகள் நிறுவகம் பற்றிய அறிமுகம் மற்றும் கலைமாமனி நாசரின் இயக்குனராக மற்றும் நடித்த 600 படங்கள் போன்றவற்றில் பெற்றுக்கொண்ட அனுபவங்கள்

நாடகம், தளுவலாக்கம், படைப்பாக்கம் மற்றும் ஈழத்து சினிமா துறையை முன்னேற்றுதல் மற்றும் ஊக்குவித்தல் போன்ற பல விடயங்கள் பற்றி கதையாடல் நிகழ்வு இடம்பெற்று நன்றியுரை நடன நாடகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ் அவர்களினால் சிறப்பாக நடைபெற்று கலைமாமணி நாசர் உடனான புகைப்படம் எடுத்தல் நிகழ்வுடன் இனிதே நிறைவுற்றது.

# டோர்னியர் 228 ராணுவ விமானங்களை இலங்கைக்கு பரிசாக வழங்கும் இந்தியா

**(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)**

கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்து வரும் இலங்கை அதில் இருந்து மீள பல்வேறு நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது.இலங்கைக்கு இந்தியா பெருமளவு கடன் உதவியும் அளித்துள்ளது.இந்த நிலையில் இலங்கைக்கு இந்தியா 2 ராணுவ விமானங்களையும் பரிசாக வழங்க முடிவு செய்துள்ளது.

இந்த ஆண்டு தொடக்கத்தில் இலங்கையின் முன்னாள் வெளியுறவு துறை மந்திரி பிரீஸ் இந்திய வெளியுறவு துறை மந்திரி டாக்டர் ஜெய்சங்கர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித்தோவல் ஆகியோரை சந்தித்து பேசினார்.

அப்போது இந்தியாவின் டோர்னியர் ராணுவ விமானத்தை இலங்கை வாங்குவது குறித்து பேச்சு வார்த்தை நடத்தியது. இதில் 2 ராணுவ விமானங்களை கொடுப்பது என முடிவு செய்யப்பட்டதாக தெரிகிறது.

இந்துஸ்தான் ஏரோ நாட்டிக்கல் நிறுவனம் இந்த விமானத்தை தயாரித்து உள்ளது.முற்றிலும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இந்த விமானம் தற்போது இந்திய கடலோர காவல் படை மற்றும் இந்திய விமானபடையில் பயன்படுத்தப்படுகிறது. அதிநவீன வசதிகள் கொண்ட இந்த விமானம் கடற்படையின் உளவு பிரிவுக்கும் பயன்பட்டு வருகிறது. 2 என்ஜின்கள் கொண்ட இந்த விமானம் கடல்சார் கண்காணிப்பு மற்றும் பேரிடர் காலத்தில் மீட்பு பணியில் ஈடுபடுத்தபடுகிறது.

இன்னும் ஓரிரு நாளில் 2 டோர்னியர் 228 ராணுவ விமானங்களை இந்தியா இலங்கையிடம் ஒப்படைக்கும் என தெரிகிறது.

இந்தியா தனது 75-வது சுதந்திர தினத்தை கொண்டாடி வரும் சூழ்நிலையில் ஆகஸ்டு 15-க்கு முன்பாக இந்த விமானங்களை இலங்கைக்கு பரிசாக வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விமானங்களை கடல் படைக்கு பயன்படுத்த இலங்கை திட்டமிட்டு உள்ளது.

# சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்கில் இளைஞர், யுவதிகளுக்கான பயிற்சி பட்டறை!







ஆசிய மன்றத்தின் அனுசரணையில் புயுகுளுழு நிறுவனத்தினால் அமுல்படுத்தப்பட்டு வரும் “இலங்கையில் சமூக ஒருமைப்பாட்டினை வலுப்படுத்தல்” எனும் தலைப்பில் சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்குடன் அம்பாறை மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட மூவின இளைஞர் யுவதிகளுக்கான ஒரு நாள் பயிற்சி பட்டறை அண்மையில் (14) காரைதீவு லேடி-லங்கா மண்டபத்தில் விமர்சையாக இடம்பெற்றது.

புயுகுளுழு நிறுவனத்தின் பணிப்பாளர் திரு. யு.து. முயஅடை ஐஅனயன அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வளவாளராக திரு. ஆ. சுயளாயன கலந்து கொண்டு பல்வேறு குழுச்செயற்பாடுகளும், பங்குபற்றலுடன் கூடிய ஆளுமை விருத்தி தொடர்பான பயிற்சிகளும் இளைஞர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும் இந்நிகழ்வில் புயுகுளுழு நிறுவனத்தின் கள உத்தியோகத்தர்களான திரு. இஸ்மத், திரு. சுமன், மற்றும் திரு. ஜப்ரான் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# உள்ளூர் இளைஞர் யுவதிகளுக்கு சர்வ மத பன்மைத்துவ செயலமர்வு



**(சியாத்.எம்.இஸ்மாயில்)**

தேசிய சமாதான பேரவையின் அனுசரணையுடன் றுஹூணு லங்கா அமைப்பின் ஒருங்கிணைப்பில் உள்ளூர் இளைஞர் சர்வ மத குழுவினருக்கு மத சகவாழ்வு, நல்லிணக்கம் மற்றும் சமாதானம், பன்மைத்துவ செயலமர்வு அக்கரைப்பற்று மெங்கோ காடனில் நடைபெற்றது.

நீடித்து நிலைத்திருக்கக் கூடிய சமாதானம், இன ஐக்கியம், சகவாழ்வு போன்றவற்றைக் கட்டியெழுப்புவதற்கான பல்வேறு செயற்திட்டங்களையும், பயிற்சிகளையும் தேசிய சமாதான பேரவை பிரதேச மட்டங்களில் மேற்கொண்டு வருகின்றது.

அவ்வாறான செயற்றிட்டங்களில் ஒன்றான இச் செயலமர்வில் சர்வமத குழுவின் நோக்கு, அதன் இலக்கு, நிதி பெறும் வழிமுறைகள், சமூக அங்கீகாரம், உள்ளக ஒற்றுமை குழுச் செயற்பாடு மற்றும் பெறுபேறு தொடர்பில் விரிவான விளக்கமளிக்கப்பட்டதுடன் பங்குபற்றுனர்களுக்கிடையிலான குழுச் செயற்பாடுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வளவாளர்களாக, தேசிய சமாதான பேரவையின் சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் எம்.யூ. உவைஸ் மதானி, ஆசியா மன்றத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் இம்ரான் ஹசன் ஆகியோர் வளவாளராகக் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கியதுடன், றுஹூணு லங்கா அமைப்பின் தலைவர் எம்.எஸ்.ஜௌபர் மற்றும் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், இளைஞர் கழக உறுப்பினர்கள், இளைஞர் மதத்தலைவர்கள், பெண்கள் அமைப்பின் இளைஞர் உறுப்பினர்கள், சமூக மட்ட செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கலாபூஷணம் ஸகியா சித்திக் பரீட் எழுதிய “நமது வரலாற்று ஆளுமைகள்” (பகுதி -1) நூல் வெளியீடு

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

பிரபல எழுத்தாளரும், பன்னூலாசிரியரும், ஓய்வுபெற்ற ஆசிரியையுமான கலாபூஷணம் ஸகியா சித்திக் ஃபரீட் எழுதிய ”நமது வரலாற்று ஆளுமைகள்” (பகுதி -1) எனும் நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9 மணிக்கு கொழும்பு - 10, தபால் தலைமை கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்காவின் தலைவர் என்.எம் அமீன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்கு பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான றிசாத் பதியுதீன், கபீர் ஹாசிம், முஜிபுர் ரஹ்மான், இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், எஸ்.எம்.மரிக்கார், அப்துல் ஹலீம் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சபீக் ரஜாப்டீன், முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் உறுப்பினர் ஏ.எம். நஹியா, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசாரப் பணிப்பாளர் இப்ராஹீம் அன்ஸார், மாத்தளை சாஹிராக் கல்லூரியின் முன்னாள் அதிபர் புவாஜி ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொள்வர்.

நூல் பற்றிய ஆய்வுரையை டாக்டர் ரவூப் ஷெய்ன் நிகழ்த்துவதோடு, நூலின் முதல் பிரதியை மூஸான் இன்டர்நெஷனலின் தலைவர் முஸ்லிம் சலாஹூடீன் பெற்றுக் கொள்வார்.

நிகழ்வை வசந்தம் தொலைக்காட்சியின் பொது முகாமையாளர் முஹம்மட் இர்பான் தொகுத்து வழங்குவார்.

அரசியல்வாதிகள், புத்திஜீவிகள், கல்விமான்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ள இந்நிகழ்வில், எவரும் கலந்து கொள்ளலாம் என ஏற்பாட்டுக் குழுவினர் திறந்த அழைப்பு விடுத்துள்ளனர்.



# உலக அநீதியின் மீது கட்டப்பட்ட தேசம்: பரிதவிக்கும் பாலஸ்தீன்?



அப்ரா அன்ஸார்

இஸ்ரேல் பாலஸ்தீன போராட்டம் என்பது தொடர்கதை.இஸ்ரேல் பாலஸ்தீனை தாக்குவதும் பதிலுக்கு பாலஸ்தீன் இஸ்ரேலை தாக்குவதுமாக இன்று சர்வதேச அரங்கம் யுத்த மேக சூழலாக மாறி உள்ளது.இந்த யுத்தத்திற்கு முடிவில்லையா என்ற பல கேள்விகள் காலாகாலமாக எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றது. உலக அரங்கில் போராட்டங்களுக்கு பஞ்சமில்லை. எங்கு பார்த்தாலும் இருள் சூழ்ந்த யுத்த மேகங்களாக இருக்கின்றன. எனினும் பாலஸ்தீனில் நடைபெறுகின்ற போராட்டங்கள் வித்தியாசமானது, வேறுபட்டது எனலாம். ஆக்கிரமிக்கப்பட்ட



மற்றும் அடிமைப்படுத்தப்பட்ட சமூகம் அதற்கு எதிராக போர் புரிவது சமூகத்தின் கடமையாகும். உரிமையை வென்றெடுக்க வேண்டியது தேசத்தில் பிறந்த மக்களின் தலையாய கடமையாகும்.

## மீண்டும் போர்!

காசா மீது இஸ்ரேல் போரை மீண்டும் ஆரம்பித்துள்ளது .சர்வதேசத்தை ஆட்டிப்படைக்கும் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகள் பாலஸ்தீன் மண்ணை ஆக்கிரமிப்பதை காலாகாலமாக மேற்கொண்டு வருகின்றது. பாலஸ்தீனத்தை முழுதாக தனதாக்கிக் கொள்ள இஸ்ரேல் தரப்பு முழு வேட்டையில் களமிறங்கியுள்ளது. இதற்கிடையில் இஸ்ரேலுக்கும் ,பாலஸ்தீனத்திற்குமிடையில் கடந்த சில நாட்களாக மீண்டும் மோதல் அதிகரித்துள்ளது. இந் நிலையில் இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ள மேற்கு கரையின் நப்லுஸ் நகரில் உள்ள யூத மத வழிபாட்டு தளத்திற்கு ஆகஸ்ட் 5ஆம் திகதி இஸ்ரேலிய பாதுகாப்பு படையினர் சென்றனர். இதனை எதிர்த்து அப் பகுதியில் உள்ள பாலஸ்தீனியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். போராட்டம் உடனடியாக வன்முறையாக மாறியது. இஸ்ரேலிய பாதுகாப்பு படையினர் மற்றும் வழிபாடு நடத்தியவர்கள் மீது தாக்குதல் தொடரப்பட்டது. இதனை தொடர்ந்து இஸ்ரேலிய பாதுகாப்பு படையினருக்கும், பாலஸ்தீன்களுக்கும் இடையே மோதல் வெடித்தது. மோதலில் ஈடுபட்டவர்களை கலைக்க இஸ்ரேலிய பாதுகாப்பு படையினர் கண்ணீர் புகை குண்டுகள் வீசியும், துப்பாக்கிச் சூடும் நடத்தியுள்ளனர். இந்த மோதலில் பாலஸ்தீனத்தை சேர்ந்த 16 வயதான ஹைத் ரஃபிக்யூ என்ற சிறுவன் இஸ்ரேலிய படையின் துப்பாக்கிச்சூட்டில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து உயிரிழந்தார்.

இந்த நிலையில் இஸ்ரேலின் ஏவுகணை தாக்குதலில் பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பு தகர்க்கப்பட்டுள்ளது. இதில் ஐந்து வயது சிறுமி உட்பட பலர் பரிதாபகரமாக உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்ததாக பாலஸ்தீன ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந் நிலையில் உயிரிழந்த ஐந்து வயது சிறுமியின் பாட்டன் தனது பேத்தியின் மரணம் குறித்து கண்ணீர் தழும்ப கேள்வி எழுப்பியுள்ளார். மிடில் ஈஸ்ட் ஐ செய்தி நிறுவனம் வெளியிட்ட காணொளியில் இவை தெரிவிக்கப்பட்டுள்ளது.

" அவள் பாலர் பாடசாலைக்கு செல்ல வேண்டும் என்று கனவு கண்டால் , அவளுக்கு ஒரு பை மற்றும் ஒரு துணி வேண்டும். இந்த அப்பாவி சிறுமி என்ன செய்தாள்? அவள் என்ன ரொக்கட்டுக்களின் பொறுப்பாளராக இருந்தாளா? அல்லது சண்டையிட்டாளா? என கண்ணீருடன் கேட்டுள்ளார்.

காச மீதான இஸ்ரேலின் தொடர் தாக்குதலில் இதுவரையில் 16 குழந்தைகள் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகமான அல்ஜெஸ ீரா செய்தி வெளியிட்டுள்ளது. இந் நிலையில் இஸ்ரேலின் தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் இரண்டாவது தளபதி கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இஸ்ரேலில் தாக்குதல்களை நடத்த திட்டமிட்டு இருந்ததாலேயே பாலஸ்தீன அமைப்பை குறி வைத்ததாக இஸ்ரேலின் இடைக்கால பிரதமர் யாயிட் லாபிர் தெரிவித்துள்ளார். ஹமாஸ் அமைப்பை சேர்ந்த டைசி அல் ஜபாரி என்பவரின் இருப்பிடத்தை குறி வைத்தே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

## எகிப்தின் தலையீடு

பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் கடந்த மூன்று நாட்களாக இஸ்ரேல் தாக்குதல் நடத்தியிருந்த நிலையில், எகிப்து மத்தியஸ்தம் செய்த பிறகு தற்காலிக போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இஸ்ரேல் கடந்த வெள்ளிக்கிழமை முதல் காசா முழுவதும் கடுமையான தாக்குதலை நடத்தியது. இஸ்ரேலின் தாக்குதலில் பல கட்டிடங்கள் தரைமட்டமாகின. மேலும், பாலஸ்தீனத்தின் அகதி முகாம்களும் தாக்குதலுக்கு உள்ளானது. பாலஸ்தீன இஸ்லாமிய ஜிகாத் குழுவை குறிவைத்து இத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. ஆனால், இதில் இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் பாலஸ்தீன பொதுமக்கள் உட்பட குழந்தைகள் ஆகும். பொதுமக்கள் உயிரிழப்புக்கு இஸ்ரேல் தரப்பிலிருந்து எந்தவித விளக்கமும் இதுவரை அளிக்கப்படவில்லை.

இஸ்ரேலின் தாக்குதலில் பாலஸ்தீனத்தை சேர்ந்த 44 பேர் பலியாகினர். பலியானவர்களில் 16 பேர் குழந்தைகள். 350 பாலஸ்தீனிய பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். கடந்த ஆண்டு காசா பகுதியில் இஸ்ரேல் - ஹமாஸ் இடையே 11 நாட்கள் நடத்திய போரை விட கோரமான மோதலாக இது அமைந்திருக்கிறது.

இந்தச் சூழலில் இரு தரப்புக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுவதற்கு எகிப்து மத்தியஸ்தம் செய்தது. இதன் விளைவாக இஸ்ரேலுக்கும் பாலஸ்தீன இஸ்லாமிய ஜிகாத் குழுவுக்கும் இடையே கடந்த மூன்று நாட்களாக நடந்த சண்டை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. போர் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து மீட்புப் பணிகளில் பாலஸ்தீன அரசு தீவிரமாக இறங்கியுள்ளது.

## இஸ்ரேலின் இடைக்கால பிரதமரின் சதியா? பாலஸ்தீனம் இதற்கு பதிலடி கொடுக்குமா?

இஸ்ரேலில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இடைக்கால பிரதமராக இருக்கும் லாபிட் தன்னுடைய பலத்தை நிரூபிக்க இந்த தாக்குதலை நிகழ்த்தி இருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்றது. இஸ்ரேலின் இந்த தாக்குதலுக்கு பாலஸ்தீன் எந்த நேரத்திலும் பதிலடி கொடுக்கலாம் என்பதால் இஸ்ரேலில் கடும் பதற்றம் நிலவுகின்றது. வான்வெளி தாக்குதல்களை தடுக்க இஸ்ரேல் விமான படையினர் தயார் நிலையில் இருப்பதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.இஸ்ரேல் வெளிப்படையாக பலமாக இருந்தாலும் ஹமாஸ் இயக்கத்தை அஞ்சுகிறது என்பது மறைமுக உண்மையாக உள்ளது.காசா பகுதியைச் சுற்றி கடுமையான தடைகளை இஸ்ரேல் விதித்திருந்தாலும், ஹமாஸ் இயக்கம் காசாவை தன்னுடைய கட்டுப்பாட்டில் தான் வைத்திருக்கிறது.

தற்போது தற்காலிகமாக போர் இடைநிறுத்தப்பட்டாலும் இப்போது நடத்தியிருக்கும் இஸ்ரேலின் தாக்குதலுக்கு பாலஸ்தீன் பதிலடி கொடுக்கலாம் என்பது இஸ்ரேலின் அச்சமாக உள்ளது.எனினும் பலம்மிக்க ஹமாஸ்/டன் இஸ்ரேல் மோதாமல் இருப்பதில்லை.

பாலஸ்தீனப் பிரச்சினையை நம் காலத்தின் மாபெரும் தார்மீகப் பிரச்சினை என்றார் நெல்சன் மண்டேலா. பாலஸ்தீன மக்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதியை, அவர்களின் துயரத்தை இதைவிடச் சுருக்கமாக அதே நேரத்தில் மனதைத் தைக்கும் விதமாக ஒருவரால் கூற முடியாது. அதே நேரத்தில் காசா பகுதியில் வசிக்கும் சுமார் 20 இலட்சம் பாலஸ்தீன மக்களின் நிலைமை மோசமடைந்திருக்கிறது. பொருளாதாரம் சீர்குலைந்துவிட்டது. குடிநீர், மின்சாரம், மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

இதற்கு தீர்வே இல்லையா என்ற கேள்விகளுக்கு மிக விரைவில் விடை கிடைக்காது என்பதே உண்மை.இந்த உலக அநீதியின் மீது கட்டப்பட்ட தேசமான இஸ்ரேல் நிலைத்து நிற்கும் வரையில் பாலஸ்தீன மக்களின் மேகங்கள் இருள் சூழ்ந்தே இருக்கும்.





# உதைப்பந்தாட்ட தேசிய அணியில் இடம்பிடித்த இஸ்ஹறான்!







17 வயதுக்குட்பட்ட உதைப்பந்தாட்ட வீரர்களினை இலங்கையின் தேசிய அணிக்கு தெரிவு செய்யும் முகமாக கடந்த சனியன்று பொலன்னறுவையில் முதல்கட்டமாக இடம்பெற்ற போட்டியில் SAMMANTHURAI ROYAL MADRIT விளையாட்டு கழகம் சார்பாக பங்கு பெற்றி தெரிவு செய்யப்பட்ட இரு வீரர்களான ASNIF மற்றும் ISHAN ஆகியோருக்கான இரண்டாம் கட்ட தேர்வு கடந்த 08 ம் திகதி கொழும்பில் உள்ள பெதகனை மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் 150 வீரர்கள் கலந்து கொண்டனர் இவர்களில் இன்றைய இரண்டாம் கட்ட தெரிவுகான போட்டியில் 60 வீரர்கள் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த 60 வீரர்களில் சம்மாந்துறையை பிரதிநிதித்துவப்படுத்தி சென்றிருந்த றோயல் மெட்ரிட் விளையாட்டுக் கழகத்தின் இரு வீரர்களும் உள்ளடங்குகின்றனர் என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

தேசிய உதைப்பந்தாட்ட அணியில் இளவயதில் இடம்பிடித்த I.T. இஸ்ஹறான் அஹமட் மற்றும் இறுதி சுற்றுவரை சிறப்பாக விளையாடிய M.N.M. ஹஸ்னிப் அஹ்னாப் இருவரையும் பாராட்டும் நிகழ்வும், ஊர்வலமும் வெகு விமர்சையாக இடம்பெற்றது.

சம்மாந்துறையை பிரதி நிதித்துவப்படுத்தி 17வயதிற்குட்பட்ட உதைப்பந்தாட்ட போட்டியில் சிறப்படம்பெற்ற இவர்களை சம்மாந்துறை றோயல் மெட்ரிட் விளையாட்டு கழகத்தால் பிரம்மாண்டமான ஊர்வலம் ஒன்றில் தங்களது பயிற்றுவிப்பாளரான A.A.M. தானிஸ் மற்றும் சக உதவி பயிற்றுவிப்பாளர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் இடம் பெற்றது.

இந்த ஊர்வலத்தின் போது உதவிய விளையாட்டுத்துறைசார் அதிகாரிகள் உட்பட கழக வீரர்கள் என பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.



# லண்டன் சென்ற இலங்கை ஹொக்கி வீரர்களுக்கு பாராட்டு நிகழ்வு

(அஷ்ரப் ஏ சமத்)

இலங்கையில் உள்ள ஹொக்கி விளையாட்டுக்குழு லண்டனில் நடைபெறவுள்ள உலக ஹொக்கி விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்வதற்காக 35 பேர் கொண்ட குழு 9ஆம் திகதி லண்டன் பயணமாகியது. இக்குழுவுக்கு இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகமும், ஸ்ரீலங்கா ஏயாலைன், நிபோன் பெயின்ட் லங்கா நிறுவனங்கள் அனுசரனை வழங்கியுள்ளது.

மேற்படி விடயமாக கடந்த (08) அன்று கொள்ளுப்பிட்டியில் உள்ள சுற்றுலா பாடசாலையில் ஊடக மாநாடு இலங்கை ஹொக்கி தேசிய சங்கத்தின் தலைவர் பௌசுல் ஹமீத் தலைமையில் நடைபெற்றது. இவ் ஊடக சந்திப்பில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் தலைவர் ஜலக்கா கஜபாகு ஸ்ரீலங்கா விமான நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றிச்சாட் நியுட்டோல், நிபோன் பெயின்ட லங்கா நிறுவனத்தின் பொது முகாமையாளர் நிமிந்த அபேசிங்கவும் கலந்து கொண்டனர்.






இங்கு சுற்றுலாத்துறை தலைவர் கருத்து தெரிவிக்கையில் - இலங்கையில் உள்ள விளையாட்டு விரர்களை வெளிநாடுகளுக்கு அனுசரனை வழங்குவது எமது நாட்டின் சுற்றுலத்துறையை அவர்கள் செல்லும் நாடுகளில் ஊக்குவித்து அத்துறையை வளர்ப்பதற்காகும். இதே போன்று எதிர்காலத்தில் வேறு பல விளையாட்டுப் போட்டிகளுக்கும் எமது அதிகார சபை அனுசரனை வழங்கும். எனத் தெரிவித்தார்.

ஹொக்கி சங்கத்தின் தலைவர் பௌசுல் ஹமீத் தகவல் தருகையில் - ஒவ்வொறு 2 வருடத்திற்கு ஒரு முறை இப் போட்டி உலக நாடுகள் பங்கு கொண்டு நடைபெறுகின்றன. கடந்த கால கொவிட் 19 தொடர்பாக எமது வீரர்கள் வெளிநாட்டுப் போட்டிகள் தொடர்கள் இடைப்பட்டடன்.

இவ் வீரர்கள் 35 பேர் நாளை 09ஆம் திகதி லண்டன் நோட்டின்கனில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்கின்றனர். இப் போட்டிகள் 12ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. லண்டனில் வாழும் இலங்கையர் 6 பேரும் இவ் அனியில் இணைந்து கொள்கின்றனர்.

இவ் விளையாட்டுப்போட்டியில் 40வயதுக்குட்டபட்டவர்கள் கொண்ட ஏ அணி இங்கிலாந்து, ஸ்பெயின் கானா, மற்றும் தெற்கு ஆபிரிக்கா விளையாடும் அத்துடன் ஜேர்மனி, தெற்கு ஆபிரிக்கா, இங்கிலாந்து பிராண்ஸ், ஆகிய 40 அணிகள் போட்டியில் மோதுகின்றனர்.

35 வயதுக்குட்பட்ட இலங்கை அணி ஆகஸ்ட் ஜேர்மணியுடன் 12ஆம் திகதி நோட்டிங் வல்வேட் பல்கலைக்கழக மைதாணத்தில் முதல் நாள் போட்டி ஆரம்பமாகின்றது.

இதன் மூலம் இலங்கையில் சுற்றுலாத்துறை மேலும் முன்னேற்றுவதற்கான ஒரு களமாக இப் போட்டிகள் அமையும். இலங்கை மீள எழுச்சிபெற்று வருவதற்கு கிரிக்கட், காற்பாந்தாட்டம். கூடைப்பந்தாட்டங்களை நிகழ்த்து வதற்கு ம் திட்டமிட்டுள்ளது - என தெரிவித்தார்.

# இளம்பிறை கிண்ணத்தை சுவீகரித்த அர்-ரஷாத்





(எச்.எம்.எம்.பர்ஸான்)

கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நாவலடி இளம்பிறை விளையாட்டுக் கழகம் நடாத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடரை தியாவட்டவான் அர் ரஷாத் அணி சுவீகரித்துக் கொண்டுள்ளது.

பதினாறு அணிகள் பங்குபற்றிய இத் தொடரின் இறுத்திப் போட்டி நேற்று (7) கேணிநகர் அல் மதீனா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் தியாவட்டவான் அர் ரஷாத் மற்றும் நாவலடி இளம்பிறை அணிகள் மோதிக் கொண்டன.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய அர் ரஷாத் அணி ஐந்து ஓவர்கள் முடிவில் இரண்டு விக்கட்டுக்களை இழந்து 82 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நாவலடி இளம்பிறை அணி 4 விக்கட்டுக்களை இழந்து 54 ஓட்டங்களை பெற்று தோல்வியடைந்தது.

இறுதிப்போட்டி நிகழ்வில் அதிதிகளாக கோறளைப்பற்று வடக்கு கிராம சேவை உத்தியோகத்தர் திரு தவேந்திரன், இளம்பிறை விளையாட்டுக் கழக ஆலோசகர் கைதர் அலி, கேணிநகர் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் அப்துல் கபூர் ஆகியோர் கலந்து கொண்டு கிண்ணங்களை வழங்கி வைத்தனர்.

# ப்ளூ நேவிஸ் சவால் கிண்ணம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை லெஜன்ஸ் விளையாட்டு கழகம் நடாத்துகின்ற வு20 தொடரின் குழு நிலை போட்டியில் சாய்ந்தமருது பிரைவ் லீடர்ஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்தாடிய கல்முனை ஜிம்ஹானா விளையாட்டு கழகம் வெற்றிவாகை சூடியது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஜிம்ஹானா அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கட் இழப்பிற்கு 141 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலளித்தாடியே சாய்ந்தமருது பிரேவ் லீடர்ஸ் விளையாட்டு கழகத்தினர் 20 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதன் மூலம் ஜிம்ஹானா அணி 16 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.



இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பிரபல வர்த்தகரும் யுஊயு ரூ ஞழுடுனு நிறுவனத்தின் உரிமையாளருமான ஏ.சி. அலி சப்ரி கலந்து சிறப்பித்து, போட்டியின் ஆட்ட நாயகனுக்கு விருதும் வழங்கி கௌரவித்தார்.



